சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 05 ஞாயிற்றுக்கிழமை (20.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 214




## அகோர எறிகணைத் தாக்குதல்

# வன்னியில் இடப்பெயர்வு

# மக்கள் பெரும் அவலம்

### உதவி எதுவுமின்றி தவிப்பு

(கிளிநொச்சி)

இராணுவம் மேற்கொண்டு வரும் வலிந்த தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக வன்னியின் மேற்குப் பகுதியில் பாரிய மக்கள் அவலம் ஏற்பட்டுள்ளது.

மன்னாரின் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த அனைத்து மக்களும் இடம் பெயர்ந்து விட்டனர். மன்னார் மாந்தை மேற்கைச் சேர்ந்த 50 வீதமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)



### இலங்கைச் சகோதரர்கள் இருவர் லண்டனில் கைது

(லண்டன்)

பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு இலங்கைச் சகோதரர்கள் லண்டனில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான வணிகக் கல்வி - II(பகுதி -II) பாட மாதிரி வினாத்தாள்.

## படையினரின் அடுத்த இலக்கு கிளிநொச்சியை கைப்பற்றுவது

### ஹெகலிய ரம்புக்வெல கூறுகின்றார்



படையினரின் அடுத்த இலக்கு கிளிநொச்சியே என அரசாங்கப் பாதுகாப்புப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அந்த இலக்கை அடைந்து பூரண வெற்றியைக் கொண்டாடும் நாள் வெகுதொலைவில் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

படையினர் விடத்தல் தீவைக் கைப்பற்றியதன் ஊடாகத் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பாகக் கடற்புலிகளின் தலைவர் சூசைக்கு இது ஓர் பெரிய தோல்வி எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## வடக்குக் கிழக்கில் கைது செய்யப்படுபவர்கள் தென்பகுதி சிறைச்சாலைகளில் துன்புறுகின்றனர்

### பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தென்சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாவதாக பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் பணியாற்றும் அதிகாரிகள் விசாரணைகள் இடம்பெறும் தவணைகளில் நீதிமன்றங்களுக்கு ஆஜர் ஆகாததால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் அப்பாவிகள் கூட நீண்ட நாள்களாகத் தடுத்து வைக்கப்படும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் புதிய நீதிமன்றத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

அடையாள அட்டை இல்லை என்று கைது செய்யப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்கள மொழி தெரியாததாலேயே கைது செய்யப்படுவதாகவும் இந்த நிலைமை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நீதித்துறையுடன் இணைந்து பொலிஸாரும் பாதுகாப்புப் (12 ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் மோதல் ஏழு படையினர் பலி

மன்னார் மாவட்டத்திலுள்ள குருந்தன் குளம் பகுதியில் நடவடிக்கை மேற்கொண்ட படையினர் மீது தாக்குதல் நடத்தி அதனை முறியடித்ததாகவும் இதில் 7 படையினர் கொல்லப்பட்டதுடன் 15ற்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

குருந்தன் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்குமிடையில் மோதல் நடைபெற்று படையினரின் நடவடிக்கை முறியடிக்கப்பட்டதுடன் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# தமிழக மீனவர்களை கொல்லும் கொடுஞ்செயலை இலங்கை இராணுவம் தொடர்ந்து செய்கிறது

## உண்ணாவிரதத்தில் கருணாநிதி ஆவேச உரை

(சென்னை)

**இந்தியாவிலிருந்து செல்கின்ற -தமிழ் மீனவனை -தமிழக மீனவனை திரும்பி வராமல் செய்வதற்கு சிறிலங்காவில் வாழ்கின்ற சிங்கள இராணுவத்தை சேர்ந்தவர்கள் -நமது மீனவர்களை கொன்று குவிக்கும் நிகழ்ச்சி ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றது என்று தமிழ்நாட்டின் முதல்வர் கலைஞர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.**



தமிழ்நாட்டு மீனவர்களை சிறிலங்கா படுகொலை செய்வதை கண்டித்தும் சிறிலங்காவை இந்திய அரசு தட்டிக்கேட்க வலியுறுத்தியும் சென்னையில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற உண்ணாநிலை போராட்டத்தை தொடக்கிவைத்து கருணாநிதி பேசியதாவது.

நான் கிஞ்சிற்றும் எதிர்பாராத அளவுக்கு இந்தப் போராட்டத்தில் இன்று ஈடுபடவேண்டிய ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலை உருவாகி இருக்கின்றது.

இது கழகத்துக்கு தவிர்க்க முடியாத சூழ்நிலையா? தமிழ்பெருமக்களுக்கு தவிர்க்க முடியாத சூழ்நிலையா? என்றால் நான் இந்த இரண்டிற்கும் பதிலாக சொல்ல விரும்புவது தமிழகத்தையும் சேர்த்து ஆண்டுகொண்டிருக்கின்ற மத்திய அரசாங்கத்துக்கு தவிர்க்க முடியாத சூழ்நிலை என்பதுதான். மிகப்பொருத்தமென்று நான் கருதுகின்றேன்.

ஏனென்றால் இங்கே நம்முடைய தம்பி சுப.வீரபாண்டியன் எடுத்துக்காட்டியதைப் போல் ஏழு எட்டு ஆண்டுகாலம் அல்ல, பத்தாண்டுகாலமல்ல, இருபதாண்டுகாலமல்ல, 1956 முதல் நடைபெற்றுவருகின்ற ஒரு நீண்ட நெடிய போராட்ட வரலாற்றில் இன்றைக்கு நாம் ஒரு அத்தியாயத்தை எழுதிக் கொண்டிருக்கின்றோம்.

இந்த அத்தியாயத்தை நாம் எழுதத் தொடங்குகின்ற வரையில் தமிழகம் -சிறிலங்கா அரசால், இலங்கையில் வாழுகின்ற சிங்களவர்களால் எந்தெந்த வகையில் எல்லாம் வேதனைக்கு, சோதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றதென்பதை எண்ணிப்பார்த்து அவ்வப்போது நமது எதிர்ப்புணர்வை ஜனநாயக ரீதியில், அமைதி வழியில், அறநெறியோடு எடுத்துக் காட்டியும் கூட அதைப் பொருட்படுத்தாமல் சிறிலங்கா அரசு நடந்து கொள்வதும் அதை தட்டிக்கேட்கவேண்டுமென்று நாம் மத்தியஅரசிடத்தில் முறையீடு செய்வதும் வழக்கமான ஒன்றாக நமக்கும் பழக்கப்பட்டுப்போன ஒன்றாக -கேட்டுக்கேட்டு மத்திய அரசுக்கும் பழக்கப்பட்டுப்போன ஒன்றாக ஆகிவிட்ட சூழ்நிலையில்தான் இன்று நாம் இங்கே கூடியிருக்கின்றோம்.

நமது நிலையென்ன? நாம் எந்தளவிற்கு இப்போது பாதிக்கப்பட்டிருக்கின்றோம்? என்பதையெல்லாம் ஆதாரபூர்வமாக சான்றுகளோடு எடுத்துக்காட்டவேண்டிய, பட்டியல் போட்டுக்காட்டவேண்டிய அவசியமில்லாமல் நீங்கள் அனைவரும் அறிந்திருக்கின்றீர்கள்.

ஒவ்வொருநாளும் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்கின்ற தமிழ்நாட்டு மீனவன் திரும்பி வருவது நிச்சயமா? என்ற கேள்விக் குறியோடு செல்லவேண்டியிருக்கின்றது.

இயற்கையின் ஆவேசத்தால் திரும்பி வர முடியாமல் போகலாம்.

புயலடித்து, அதன் காரணமாக தான் செல்கின்ற கட்டுமரம் திசைமாறிப்போகலாம். அதனால் திரும்பிவராமல் போகலாம். ஆனால் இது அப்படியல்ல. இன்று இந்தியாவில் இருந்து செல்கின்ற -தமிழ் மீனவனை -தமிழக மீனவரை திரும்பிவராமல் செய்வதற்கு சிறிலங்காவில் வாழ்கின்ற சிங்கள இராணுவத்தை சேர்ந்தவர்கள் நமது மீனவர்களை கொன்று குவிக்கும் நிகழ்ச்சி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது.

நாம் அதை தடுத்து நிறுத்த எடுத்த முயற்சிகள் ஒன்றல்ல இரண்டல்ல, இடையிலே இதற்கெல்லாம் காரணம், சில பேரால் கண்டுபிடிக்கப்படுகின்றது.

சில அரசியல்வாதிகள் காரணத்தை கண்டுபிடிக்கின்றார்கள். நான் அவர்கள் கண்டுபிடித்த காரணம் தவறு என்று சொல்ல முன்வரவில்லை. ஆனால் அது மாத்திரம் காரணம் அல்ல என்பது எனக்குத் தெரியும். இந்தக் காரணத்தை சொல்கின்றவர்களுக்கும் தெரியும்.

கச்சதீவை நாம் விட்டுக் கொடுத்த காரணத்தால்தான் இப்படியெல்லாம் நடக்கிறது என்று பேசுகிறவர்களும் இருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கச்சதீவு என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? என்பதே புரியாத மக்கள் பலபேர் உண்டு.

ஆனால் கச்சதீவு என்ற ஒரு மந்திரத்தை சொல்லி, கச்சதீவை திராவிட முன்னேற்றக் கழக அரசு விட்டுக்கொடுத்துவிட்டது. அதனால்தான் இந்த தீமைகளையெல்லாம் நாம் இன்று சந்திக்க நேரிடுகின்றது என்று சொல்கிறவர்கள் உண்டு.

கச்சதீவை நாம் எப்போது இழந்தோம்? எப்படி கச்சதீவு தமிழக எல்லையிலிருந்து பறிக்கப்பட்டது. என்பது எல்லாம் சாதாரணமான விடயங்கள் அல்ல. சரித்திர சான்றுகளோடு நான் உங்களுக்கு விளக்கவேண்டி செய்திகள் பல இருக்கின்றன.

இந்தக் கச்சதீவை இலங்கைக்கு அதோடு ஏற்பட்ட உடன்பாட்டின்படி விட்டுத்தருவது என்று 1974ஆம் ஆண்டு இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இந்தியப் பிரதமராக இருந்தபோது ஒருமுடிபு எடுக்கப்பட்டது.

அந்த முடிபை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளாதது மாத்திரமல்ல, சட்டமன்றத்திலேயே தீர்மானம் நிறைவேற்றி கச்சதீவை விட்டுத்தர முடியாது என்று மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கின்றோம்.

21.08.1974 அன்று கச்சதீவு பற்றி தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முதலமைச்சராக இருந்த நான்தான் முன்மொழிந்தேன்.

நாம் விரும்பி எங்களுக்கு கச்சதீவு வேண்டாம், நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள் என்று விட்டுவிடவில்லை. நாம் தடுத்து நிறுத்தியும் கேளாமல், நாம் குரல் கொடுத்தும் கேளாமல், நமது குரலுக்கு மதிப்பில்லாமல் போய் கச்சதீவு சிறிலங்காவுக்குச் சென்றது.

சிறிலங்காவுக்குச் செல்லும்போது சில உரிமைகளை நாம் அதில் அடக்கி வைத்திருந்தோம் அந்த உரிமைகளும் அவசரகால நிலைக்காலத்தில் நம்மிடம் இருந்து பறிக்கப்பட்டு அவைகளும் நம்மை விட்டு அகன்றது.

இன்று நாம் அந்த உரிமைகள் திரும்ப வேண்டும் என்பதற்காக வாதாடுகின்றோம். அப்படி வாதாடுவதன் எல்லை ஏது என்றால் கச்சதீவே எமக்கு திரும்ப வேண்டும் என்று சொல்கின்ற அளவுக்குப்போய் முடியுமென்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். என்றார் கலைஞர் கருணாநிதி. (ந-5)

## இலங்கை போ.நி.க.குழுவின் கோவைகள் நோர்வேயின் ஆவணக் காப்பகத்தில்

(ஒஸ்லோ)

ஓரிரு அதிகாரிகளுடன் மாத்திரம் நோர்வேயில் இயங்கிக் கொண்டிருக்கும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, தனது செயற்பாடுகளை முடிபுக் கொண்டுவரவுள்ள நிலையில் இலங்கையில் கண்காணிப்புக்குழு பணிபுரிந்த காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட கோவைகள் மற்றும் தரவுகளை நோர்வே தேசிய ஆவணக் காப்பகத்தில் வைப்பதற்கு முடிபு செய்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தன்து இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த ஆவணங்களிலுள்ள இரகசியத் தகவல்களைப் பொதுமக்கள் பார்வையிட தடைவிதிக்கப்படும் எனவும் அந்த தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கணக்குகள் உள்ளிட்ட அதிகார பூர்வமானதும் உண்மையானதுமான தகவல்களை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள கண்காணிப்புக்குழு; ஆய்வாளர்கள், மதிப்பீட்டாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட சகலருக்கும் சிறந்த தகவல்மூலமாக இது இருக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தத் தகவல்கள் கண்காணிப்புக்குழுவின் இணையத்தளத்திலும் பதிவு செய்யப்படும் எனவும் அந்த தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமையகத்தின் செயற்பாடுகள் ஒக்டோபர் மாதத்தில் முடிபுக்கு கொண்டுவரப்படவுள்ளதாகவும் இந்த அறிக்கைகள் 2008 நவம்பர் மாதத்தில் தயாராகிவிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)


**விற்பனைக்கு**

வர்ண மீன்கள், மீன்களுக்கான மருந்துகள், மீன் தொட்டி உபகரணங்கள், ஆடு, மாடு, நாய்களுக்கான பூச்சி மருந்துகள், தடுப்பூசிகள், வர்ண செவ்வரத்தைகள், பூஞ்செடிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

திருப்பதி மெமோறியல் லேன்,
மானிப்பாய். (1471)

**மிக மலிவு விலைகளில்...**

Pentium 4

(17" Dell Moniter, Intel Mother Board, Intel Processor 1.6, 256 Ram, CD ROM, 40GB Hard Disk, Keyboard & Optical Mouse

17" Dell Moniter 8,500 மட்டுமே

ரூபா 32,750 மட்டுமே



திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி. (ஆச் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக) யாழ்ப்பாணம்

**அபூர்வ ஜோதிடம்**

கடும் அவஸ்தைப்படுத்தும் நோய்களை விரைந்து குணமாக்கும் மருந்தியல், வாழ்வியல் அதிர்ஷ்ட பலன் கண்டறிதல்.

தினமும்:-மு.ப 8.30 - பி.ப 2.00

உயரப்புல பிள்ளையார் கோவிலடி,
தபால்பெட்டி லேன்,
ஆனைக்கோட்டை.

(இ-009)

**உள்நாடு வெளிநாடுகளிற்கான!**

துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

திருமுருகன் கொம் நெற்

கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள


WESTERN UNION

குறிப்பு:- அனுப்பப்படும் ஒவ்வொரு பொதிகளிற்கும் காப்புறுதி உண்டு

# கடலெல்லையை தாண்டும் தமிழக மீனவர்களை சுட்டுக்கொல்ல வேண்டிய அவசியமில்லை

## கருணாநிதி தகவல்

இந்திய இலங்கை கடலெல்லையைத் தாண்டி தவறுதலாக உட்பிரவேசிக்கும் தமிழக மீனவர்களை சுட்டுக்கொல்ல வேண்டிய அவசியமில்லை. கச்சதீவு விவகாரத்தில் தமிழக மீனவர்களின் உரிமைகளை மீட்பதற்கு நட



வடிக்கை எடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று முதலமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. உயர்நிலை செயற்திட்டக் குழு கூட்டத்துக்குப் பின்னர் நிருபர்களுக்கு முதலமைச்சர் கருணாநிதி அளித்த பேட்டியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பேட்டியின் விபரம் வருமாறு,

கேள்வி:-மத்திய அரசிடம் உங்களுக்கு இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தி, மீனவர் பிரச்சனை தொடர்பில் அவர்களுக்கு நீங்கள் ஏன் ஒரு அழுத்தம் கொடுக்கக் கூடாது என்று எதிர்கட்சிக்காரர்கள் கேட்கிறார்களே?

பதில்:- நான் உங்களை எதிர்கட்சியாக கருதவில்லை. எனவே, நீங்கள் இந்த கேள்வியைக் கேட்கக் கூடாது.

கேள்வி: கச்சதீவை மீட்க வேண்டும் என்றும் மீன் பிடிக்கும் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்றும் மீனவர்கள் மத்தியிலே சொல்லப்படுகிறது. இதிலே தமிழக அரசின் நிலை என்ன?

பதில் : இந்துப் பிரச்சினை சட்டப் பிரச்சினை அல்லவா? இதில் நானே முடிவைச் சொல்லி விட முடியாது. கச்சதீவைக் கொடுக் கும் போது தமிழ்நாடு தி.மு.க. அரசு அதனை வன்மையாக மறுத்திருக்கிறது.

அப்போது இந்திராகாந்தி பிரதமராக இருந்தார். அவர் சமாதானம் செய்து, கச்சதீ விலே நமக்குள்ள உரிமைகளுக்கெல்லாம் வழி வகுத்து விதிகள் அமைக்கப்பட்டன. அதன் பிரகாரம் தேவாலயத்திற்கு சென்று வருவதற்கான உரிமை, மீன்களை காயவைப்பதற் கும்,, மீன் பிடிப்பதற்குமான உரிமை, வலைகளைக் காய வைப்பதற்கான உரிமை என்று பல உரிமைகள் நமக்கு இருந்தன.

எனினும் நெருக்கடி நிலைக்குப் பின்னர் 1976ஆம் ஆண் டில் நம்முடைய ஆட்சி இல்லை. கவர்னர் ஆட்சிசி தான் இருந்தது. கவர்னர் ஆட்சியில் அந்த விதிகள் எல்லாம் மாற்றப்பட்டு விட்டன. (இ)

# ஹெல உறுமய அரசுக்கு ஆதரவு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்களின் போது ஜாதிக ஹெல உறுமய கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானத் திற்கு அமைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் டமைப்பிற்கு ஆதரவு வழங்குவதெனத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

மேலும் சர்வகட்சிப் பேரவையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு இணைத் துக் கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து தாம் பேரவையின் கூட்டத் தொடரில் இணைந்து கொள்ளவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படு கிறது. (இ)

# சட்டவிரோத குடியிருப்புகளை அகற்றும் அதிகாரம் அதிகார சபைக்கு உண்டு

**அனுர பிரியதர்சன யாப்பா**

(கொழும்பு)



சட்டவிரோத குடியிருப்புக்களை அகற்றும் விசேட அதிகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உண்டு என்று அமைச்சரவையின் பேச்சாளரும் அமைச்சருமான அநுர பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சட்டவிரோதமான குடியிருப்புக்களை அமைப்பது தவறான செயலாகும். கொம்பனி வீதி கிளனி பெசேஜில் இவ்வாறான சட்ட விரோதமாக அத்துமீறி கட்டப்பட்ட வீடுகளையே அப்புறப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தர விட்டுள்ளது. நீதிமன்றத்தால் வீடுகளை அகற்றுவதற்கு இடைக்கால தடை விதிக்கப் பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக எதுவிதமான கருத்தையும் கூற நான் விரும்பவில்லை என்றும் தெரிவித்தார். (இ)

# படையினரும் துணைப்படைக் குழுவினருமே பாலமீன்மடு புதைகுழிக்கு காரணம்

## கூட்டமைப்பு எம்.பி.ஜெயானந்தமூர்த்தி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பால மீன்மடு புதைகுழி பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சே. ஜெயானந்த மூர்த்தி இந்த புதைகுழிக்கு இலங்கைப் படையினரும் துணைப்படைக்குழுவினருமே காரணம் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கைப்படையினரின் பகுதியாக பால மீன்மடு இருந்து வருகின்றது. எப்பொழுது மட்டக்களப்பில் இலங்கைப் படையினர் நிலை கொள்ளத் தொடங்கினார்களோ அந்தக்காலம் தொடக்கம் அது இலங்கைப் படையினரின் பகுதியாகத்தான் இருந்து வருகின்றது.

இந்த மனிதப்புதைகுழி பற்றி குறிப்பிடப் படுகின்ற ஆண்டுப் பார்க்கும் போது இது அமைதிக் காலத்தில் இடம்பெற்றது.

இந்த புதைக்குழிக்கு இலங்கைப் படையினர் மற்றும் துணைப்படைக் குழுவினர் தான் காரணம். அவர்கள் தான் அங்கு இருக்கின்றனர்.

கடத்தல், காணாமல் போதல்கள் அதிகமாகியுள்ள நிலையில் அவர்களின் புதைகுழி தான் இது என்பது தெளிவானதாகும்.

இந்த மனிதப்படுகொலைப் புதைக் குழிக்கு உலக மனித உரிமை அமைப்புக் கள் துரித நடவடிக்கையை எடுக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்கின்றது.

மட்டக்களப்பில் கடந்த காலங்களில் வந்தாறு மூலை திராய்க்கேணி , புனாணை கொக்கட்டிச்சோலை, சத்துருக்கொண்டான், உடும்பன்குள படுகொலைகளுக்கு இலங்கை அரசால் சிறப்பு விசாரணைகள் நடத்தப்பட்டதாக சொல்லப்பட்டபோதும் அவற்றுக்குத் தீர்ப்பு எதுவும் வழங்கப்படவில்லை. உருப்படியான நீதி வழங்கப்படவில்லை.

பாலமீன்மடு புதைகுழிக்கு இலங்கைப் படையினர்தான் பொறுப்பாளிகள் என்பது உறுதியானது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்துலக நிறுவனங்களுக்கு தெரிவிக்கும்.

இது தொடர்பில் அனைத்துலக நிறுவனங்கள் உடனடியாக நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்கின்றது எனவும் சே.ஜெயானந்த மூர்த்தி தெரிவித்தார். (இ)

# முழுமையாகத் துண்டிக்கப்பட்ட கை வெற்றிகரமாக பொருத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கையின் தென் மாகாண மாவட்டமான மாத்தறையில் உள்ள ஒருவரின் துண்டிக்கப்பட்ட கைப்பகுதி 14 மணித்தியால சத்திர சிகிச்சையின் பின்னர் முழுமையாக பொருத்தப்பட்டுள்ளது.

இந்தச் சத்திரசிகிச்சை கடந்த புதன்கிழமையன்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

சத்திரசிகிச்சை முழுமையாக வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ள கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரம் சிகிச்சை யளிக்கப் பட்டவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்துக் கவனிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது. — (இ)

# சார்க் மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் வெளிவிவகார அமைச்சருக்கு பீ.எம்.கே.கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள 15ஆவது சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம் என இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு பட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிராணாப் முகர்ஜிக்கு கடித மூலம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தென் இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கட்டவிழ்த்து விடும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சார்க் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டுமெனப் பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. (இ)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு ஜப்பான் 500மில்லியன் பெறுமதியான உணவுப் பொருட்கள்

(கொழும்பு)

யுத்த அனர்த்தம் காரணமாக அகதிகளாகியுள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்கென 500மில்லியன் ரூபாபெறுமதியான உணவுப் பொருட்களை ஜப்பானிய அரசாங்கம் வழங்கவுள்ளது இதன்படி 5,600மெற்றிக் தொன் அரிசியும்,110தொன் மீனையும் வழங்க ஜப்பான் அரசு தீர்மானிதுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 2இலட்சத்து 75 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கும் 3இலட்சத்து50 ஆயிரம் பொது மக்களுக்கும் இந்த உணவுப் பொருட்கள் இரண்டு மாதத்திற்கு போதுமரனதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# 28ஆம் திகதி கொழும்பு செல்லும் பாகிஸ்தான் கடற்படைக் கப்பல்

பாகிஸ்தானின் கடற்படை கப்பல் ஒன்று எதிர்வரும் 28 ஆம் நாள் இலங்கையின் தலைநகரான கொழும்பு துறைமுகத்துக்கு செல்லவுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

சார்க் உச்சி மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் கொழும்பு செல்லவுள்ள பாகிஸ்தானின் 'குசா' என்ற இக்கப்பல், என்ன நோக்கத்துக்காக் கொழும்பு செல்கின்றது என்பது குறித்து இதுவரை எதுவும் தெரியவரவில்லை. ஆனால், சீனாவிலிருந்து தாயகம் திரும்பும் இக்கப்பல், இடையில் கொழும்பில் தரித்துச்செல்வதாக மட்டும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பாகிஸ்தான் கப்பல் கொழும்புக்கு செல்லும் காலப்பகுதியில் இந்திய கடற்படைக்கப்பலும் கொழும்பில் தரித்து நிற்கும் என்று பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# தமிழகம் முழுவதும் தி.மு.க உண்ணாவிரதம் சென்னையில் கருணாநிதி தொடக்கி வைத்தார்

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தாக்குதலை கண்டித்து தமிழகம் முழுவதும் நேற்று சார்பில் உண்ணா விரதப் போராட்டம் நடை பெற்றது.

சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்ற உண்ணா விரதத்தை முதலமைச்சர் கருணாநிதி தொடங்கி வைத்தார்.

தமிழக கடற்கரையோர பகுதியில் உள்ள மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்க செல்லும் போது இலங்கை இராணுவ வீரர்களால் காட்டுமிராண்டித்தனமாக துப்பாக்கி சூடுநடத்தி கொலை செய்யப்பட்டுள்ளதை கண்டித்தும் மற்றும் இப் பிரச்சினையில் மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தியும் தி.மு.க. சார்பில் தமிழகம் எங்கும் உண்ணாவிரத அறப்போராட்டம் நேற்று காலை 8 மணிக்கு தொடங்கியது.

சென்னை சேப்பாக்கத்தில் அமைச்சர் ஆற்காடு வீராசாமி தலைமையில் நடை பெற்ற உண்ணாவிரத போராட்டத்தை முதலமைச்சர் கருணாநிதி காலை 8 மணிக்கு தொடக்கி வைத்தார். இந்த உண்ணாவிரத போராட்டத்தில் ஆயிரக்கணக்கான தி.மு.க.வினர் மற்றும் பொது மக்கள் பங்கேற்றுள்ளனர்.

இராமேஸ் வரத்தில் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றுள்ளனர்.

இதுபோல் மற்ற மாவட்டங்களில் அந்த மாவட்ட செயலர்கள் தலைமையில் உண்ணா விரதம் நடைபெற்றது. உண்ணாவிரதத்தை யொட்டி பலத்த பாதுகாப்பு போடப்பட்டது. மாலை 5 மணி வரை நடைபெற்ற உண்ணா விரதத்தை அமைச்சர் அன்பழகன் முடித்து வைத்தார். (இ)

# சினிமாத் துளிகள்

## அகம் புறம்



தீ நகர் படத்தை இயக்கிய திருமலை, அடுத்து இயக்கும் புதிய படத்துக்கு அகம் புறம் என்று பெயர் சூட்டியிருக்கிறார்.

இந்தப் படத்தல் ஷாம் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக 2 பிரபல கதாநாய கிகள் நடிக்கிறார்கள்.

இவர்களுடன் முன்னணி நடிகர் –நடிகைகளும் பங்கு பெறுகிறார்கள்.



## பரிவான திரிஷா!

தன்னிடம் பணியாற்றும் ஊழியர்களை கண்ணின் இமை போல பார்த்துக் கொள்கிறாராம் திரிஷா .

சொல்லிச் சொல்லி மாய்கிற ார்கள் திரிஷாவிடம் வேலை பார்ப்பவர்கள்.

திறமையான நடிகையாக மட்டும்இல்லாமல் மனிதாபிமானம் மிக்க பெண்ணாகவும் இருக்கிறார் திரிஷா. தன்னிடம் பணியாற்றும் ஊழியர்களை மதித்து அவர்களுக்குரிய வசதிகள் கிடைக்கச் செய்வதில் திரிஷாவுக்கு நிகர் திரிஷாதான் என்கிறார்கள்.

## ஜெகன் மோகினி




மாயஜால காட்சிகள் மூலம் வெற்றி பெற்ற இயக்குநர் விட்டலாச்சாரியா இயக்கிய படம் 'ஜெகன் மோகினி' நீண்ட நாள்கழித்து அந்தபடத் தை மீண்டும் ரீமேக் செய்கிறார் தயாரிப்பாளர் எச்.முரளி. இந்தப் படத்தில் நாயகியாக நமீதா நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக தெலுங்கு நடிகர் ராஜா நடிக்கிறார். வடிவேலுவும் முக்கிய கதாபாத்திரத்தில் தோன்றுகிறார்.


இந்த படத்தை ஒளிப்பதிவுசெய்து இயக்குகிறார் ஒளிப்பதிவாளர் என்.கே.விஸ்வநாதன் .

## 'ஜகா' வாங்கிய சந்தியா



ராஜாதிராஜா படத்தில் ராகவலோரன்ஸ் க்கு ஜோடியாக நடிக்க ஒப்புக் கொண்டிந்தசந்தியா தற்போது திடீரென விலகிக்கொண்டார்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த சூப்பர் ஹிட் படம் ராஜாதிராஜாதற்போது அதே பெ யரில் ராகவலாரன்ஸ் நடிக்க புதிய படம் ஒன்றை ஷக்திசிதம் பரம் தயாரித்து இயக்கவுள்ளார்.



# சினி விமர்சனம்

# சுப்ரமணியபுரம்

நட்சத்திரங்கள் :–ஜெய், ஸ்வாதி, கஞ்சா கருப்பு, சசிக்குமார், சமுத்திரக்கனி மற்றும் பலர்
ஒளிப்பதிவு : –எஸ்.ஆர்.சுதிர்
இசை : – ஜேம்ஸ் வசந்தன்
இயக்கம் : –புதுமுகம் சசிக்குமார்.

காதலையும், வீரத்தையும் சொல்லிப் பழகிய தமிழ் சினிமாவுக்கு வேறு திசையில் கதையை விரட்டி, ரசிகர்களை மிரட்டியிருக்கிறார் புதுமுகம் இயக்குநர் சசிக்குமார். பாலா, அமீருடைய வளர்ப்பு! அதைச் சொல்லாமலே புரிந்து கொள்ள வைக்கிறார் படம் நெடுகிலும்.

சுப்ரமணியபுரத்தில் தறுதலையாக திரிகிற ஐந்து நண்பர்களின்கதை. இதில் ஜெய்மட்டும் பெரியவீட்டு பிள்ளையான ஸ்வாதியைகாதலிக்க, ஸ்வாதியின் குடும்பத் தால் ஐந்து நண்பர்களும் என்னாகிறார்கள் என்பது மீதி. முதல் பாதியில் காதலும் கலகலப்புமாக நகர்கிறகதை, இரண்டாம் பாதியில் அரிவாளும் இரத் தமும் திசை மாறும் போது கலங்கிப் போகிறார்கள் ரசிகர்கள்.



மனசுக்குள் அப்படியே ஒட்டிக் கொள்கிறார் ஸ்வாதி. அந்த அகல் விழி பார்வையும், அசர வைக்கும் சிரிப்பும் மனதைவிட்டு அகலவே நாட்கள் பிடிக்கும். திருட்டுப் பார்வையிலிருந்து விலகி, நான் உங்ககிட்ட பேசனும் என்று போகிற போக்கில் ஜெய்யை அழைக்கிற காட்சியில் அசரடிக்கிறார். தன் கண்ணெதிரிலேயே நடக்கும் அந்த சம்பவமும், அவர் அலறுகிற காட்சியும் மனதை பிசைகிற பயங்கரம்.

படம் முழுக்க இறுகிய முகத்தோடு உலா வரும் சசிக்குமாரை மலர்ந்த முகத்தோடு வரவேற்பார்கள் ரசிகர்கள். இவர்தான் இயக்குநர் என்றாலும், தேவைக்கு மிகாமல் தனது பாத்திரத்துக்கு 'பாத்தி' கட்டியிருப்பதை பாராட்டலாம். நண்பனின் கொலைக்கு காரணமான சமுத்திக்கனியை வெறித்தனமாக சசிக்குமார் கொலை செய்கிற காட்சியை எப்படி சென்சார் அனுமதித்ததோ? நண்பன் கொலையுண்ட இடத்தில் சமுத்திரக்கனியின் தலையை போட்டு விட்டு ஆசுவாசப்படுத்திக்கொள்கையில் சிலிர்த்துப் போகிறது.

சைக்கிள் கடை சித்தனுக்கு கஞ்சா கருப்பு மினக்கெடும் காட்சிகள் சிரிப்பு தோரணம். சீரியல் செட் ஓடர் எதிராளிக்கு போன இரகசியத்தை, கண்டுபிடிக்கையில் தியேட்டரே சிரித்து சின்னாபின்னமாகிறது. இப்படியெல்லாம் சிரிக்க வைக்கிற கஞ்சா கருப்பு, கடைசியில் ரசிகர்களின் சாபத்தையும் வாங்கிக் கொள்கிறார். குணச்சித்திர வேடம் தெரியும். இந்தப் படத்தில் செய்திருப்பது துர்குணச் சித்திர வேடம்.

சமுத்திரக்கனியின் பதட்டமில்லாத வில்லத்தனத்தை ரசிக்கலாம். ஒவ்வொரு முறையும் பொலிஸ் ஸ்டேஷனுக்கு போன் போட்டு இந்த ஐவர் கோஷ்டியை போட்டுக் கொடுக்கும் இவர் கடைசியில் நைசாகப் பேசி ஜெய், சசியை கொலைகாரர்களாக்குவது நரித்தந்திரம். ஆசைப்படாமல், வில்லனின் நாற்காலியை நிரந்தரமாக்கிக் கொள்ளலாம் சமுத்திரக்கனி.

அந்த ஊனமுற்ற இளைஞன் நேர்த்தியான நடிப்புக்கும் ஒரு ப்லே! குறிப்பாக யுத்தகளத்தில் தானும் எறிந்து நண்பனுக்கும் சோடா பொட்டில் உதவி செய்கிறாரே, நெத்தியடி!

ஒளிப்பதிவில் ஒரு புதுப் பாதை வகுத்திருக்கிறார் ஒளிப்பதிவாளர்எஸ்.ஆர்.சுதிர். கஞ்சா கருப்பு நடந்து வரும் அந்த நீண்டகாட்சியில் அவரது அறிமுகத்தை துவக்கி வைக்கிற கமரா, அதே நீண்ட ஷொட்டில்அவரது முடிவையும்சொல் வது புதுசு.

ஜேம்ஸ் வசந்தன் இசைகாதுகளுக்கு சுகம். எண்பதுகளில் நடக்கிற கதை என்பதால், பின்னணியின் இளையராஜாவின் பாடல் களை தாலாட்ட விட்டிருக்கிறார்கள்.

அதுவே நிறைவு. பாராட்டப்பட வேண்டிய மற்றொருவர் ஆர்ட்டைரக்டர். இவர்காட்டியிருக்கும் 80ஆம் வருடம் காலச் சக்கரம் மட்டுமே செய்யக்கூடிய அற்புதம்..

சில 'வரவு' கள் தமிழ் சினிமாவின் சொத்து! அதில் சசிக்குமாரையும் சேர்க்கலாம்... தாராளமாக!

# மர்மயோகியில் ரஹ்மானின் புதிய இசை

கமல்ஹாசனின் அடுத்தமெகா பட்ஜெட் படமானமர்மயோகியில் மிக வித்தியாசமானஇசை ஒலிகளை அறிமுகப் படுத்தும் ஐடியாவில் உள்ளார் ரஹ்மான்.

இந்தப் படத்துக்காக இதுவரைதமிழ் திரையில் ஒலித்திராத லத்தீன் அமெரிக்காபாணி இசைக் கருவிகளை மர்ம யோகிக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளார் ரஹ்மான்.

சமீபத்தில் ஒருஇசை விழாவுக்கு வந்திருந்த ரஹ்மானிடம் இதுபற்றிக் கேட்ட போது நான் எல்லா படங்களுக்குமே தரமான இசையைத் தரவே முயற்சிக்கிறேன் .முயற்சிதான் என்னுடையது மற்றப்படி பாடல்களின் தலைவிதி ரசிகர்களின் மனநிலையைப் பொறுத்தே அமைகிறது. சில நேரங்களில் அதிக பட்ச விளம்பரங்கள் கூட ஒரு இசையை திரும்பத் திரும்ப கேட்க வைத்து விடும்.

ஆனால் உண்மையான இசை எப்போதும் நிலைத்திருக்கும் மர்மயோகி ஒரு வித்தியாசமான முயற்சி.அதற்கு வித்தியாசமான இசையைத் தரவே முயற்சிக்கிறேன்.

இதில் சில புதிய ஒலிகளை அறிமுகப்படுத்த லத்தீன் அமெரிக்கஇசைக்கருவிகளை உபயோகிக்கும் திட்டம் உள்ளது இசைக்குகோப் உள்ள கதை என்பதால் உங்கள் எதிர்பார்ப்புகளை பொய்யாக்காத அளவுக்குபாடல்கள் இருக்கும் என்றார் அடக்க மாக.

சமீபத்தில் உங்களைநடிக்க வைக்கும் திட்ட த்தில் இருப்பதாக பாரதிராஜா கூறி னாரா... அப்படி ஏதாவது எண்ணமிருக்கிறதா?

(சிரிக்கிறார்) அவர் என் மீதுள்ள அன்பில்அப்படிச் சொல்லியிருப்பார் இசைக்கே நேரம் ஒதுக்க முடியவில்லை என்றார்.



சமீபத்தில் வெளியான இசை ஆல் பங்களில் குசேலனுக்குஅடுத்த அதிக சிடிக்கள் விற்றுசாதனை படைத் துள்ளது ரஹ்மானின் சக்கரகட்டி என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியில் அவர் இசைத்து வெளி வந்துள்ள ஜானேதுய ஜானேநா பெரும் சாதனை புரிந்து வருகிறது.

# வில்லு படத்தில் விஜய்யுடன் நயன்!



விஜய் நயன்தாரா நடிக்கும் வில்லுபடத்தின் படப்பிடிப்பு வேகமாக நடந்து வருகிறது சிவகாசியில் விஜய்யுடன் ஒரு பாடலுக்கு ஆடிய நயன்தாரா விஜய்யுடன் ஜோடி சேரும் முதல் படம் வில்லு.

இதற்கு முன் குருவியில் விஜய்யுடன் நயன்தாரா நடிப்பதாக இருந்தது. கடைசி நேரத்தில் குறுக்குவழியில் குருவியை கைப்பற்றினார் த்ரிஷா. வில்லுபடப்பிடிப்பு பொள்ளாச்சி பழனி ஆகிய இடங்களில் நடந்தது. நயன்தாரவுக்குஇதில் குடும்பப்பாங்கான வேடம் அவரை வில்லுவில் ஒப்பந்தம் செய்ய இதுவும் ஒரு காரணம் .

படப்பிடிப்பு தொடங்கியபிறகு வெளிவந்த நயன்தாராவின்குசேலன் சத்யம் படஸ்டில்களைப் பார்த்துபதறி விட்டதாம்வில்லு டீம்இந்தக் கவர்ச்சி போதுமா இன்னும் வேணுமாஎன்றரீதியில் இருந்தன அந்தப் புகைப்படங்கள். ஆபீஸ்ரேஞ்சுக்கு இறங்கியநயனை நாம் மட்டும் ஹோம்லியாக காட்டினால் ரசிகர்கள் கோவிச்சுக்கமாட்டார்களா?

இதனால் நயனை ஹோம்லியாலிருந்து கிளாமருக்கு மாற்றியுள்ளது.வில்லு டீம் முக்கியமாக கேரளா அதிரம் பள்ளி அருவியில் ஒரு பாடல் காட்சிஎடுக்கிறார்களாம் இதில் நயனை நனைய விட்டு ரசிகர்களை சூடேற்றப் போகிறார்களாம்.

# ரஜினிக்கு ஜோடியான இலியானா !!



ஒருவரை வேண்டாம் போ! எனத் துரத்தி விட்டு, பிரபலமானதும் அவர்பின்னால் நடையாய் நடப்பது தமிழ்சினிமாவில் பழகிப் போன சமாச்சாரம்!அதில் லேட்டஸ்ட் வரவு தெலுங்கு தேச கவர்ச்சிப் புயல் இலியானா.

ஒரு வழியாக பெரிய மனது பண்ணி தமிழில் நடிக்க சம்மதித்துள்ளார். அதுவும் சூப்பர் ஸ்டார் ரஜினிக்கு ஜோடியாக! ரஜினி மகள் சௌந்தர்யா இயக்கும் சுல்தான் தி வாரியார் அனிமேஷன் படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடிக்க நீண்ட பேரத்துக்குப் பின் ஒப்புக் கொண்டிருக்கிறார் இலியானா.

ரவிகிருஷ்ணா இயக்கிய கேடி தான் இலியானாவின் முதல் தமிழ்ப்படம். கேடியின் தோல்விஅவரை கொலிவுட்டின் ராசியில்லா நடிகை பட்டியலில் சேர்த்துவிட திரும்பிக் கூடப் பார்க்காமல் ஐதராபாத்துக்கு நடையைக் கட்டினார்..

அங்கே கோயில் கட்டாத குறையாக அம்மணிக்கு அமோக ஆதரவு கிடைத்துவிட்டது. கடந்த இரு ஆண்டுகளாக த்ரிஷா, நயன்தாராவெல்லாம் எவ்வளவோ போட்டியிட்டும் இலியானா இடத்தைப் பிடிக்க முடியவில்லை.

ரஜினியின் குசேலன் படம் தொடங்கப்பட்ட போது அதில் ஒரு வேடத்தில் தோன்ற இலியானாவை வாசு அழைக்க அவரோ கால்ஷீட் இல்லையென்று கூறிவிட்டார்.

சிறிய வேடம் என்ப தால் அவர் இப்படிச் சொல்லி விட்டதாகக் கூறப்பட்டது.

இப்போது ரஜினியின் சுல்தான் படத்தில் நாயகியாக நடிக்கஒப்பந்த மாகியுள்ளார்.படத்தின் இயக்குனர் சௌந்தர்யாவே நேரடியாக ஐதராபாத்தில் இலியானாவுடன் பேச்சுநடத்திஇந்த டீலை முடித்தாராம்!.

ஏற்கெனவே விக்ரம் ஜோடியாக கே.எஸ் ரவிக்குமார் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க இலியானா ஒப்புக்கொண்டுள்ளார்.

# நோத்முதல் கோபல்லவா வரை 42



### ஓர் எதிர்க் கிளர்ச்சி

இப் பிரசித்தங்கள் முந்திய சமவாய சம்பந்தமாக நாட்டுக் கட்டுப்பாடுகளைப் போலன்றிக் கண்டி மக்களை வெகுவாக பாதித்து நின்றன. அதனால் கண்டிநாட்டு அரசியல் விவகாரமே வேறாக அமைவதாயிற்று. இவை யாவையும் ஒழுங்குசெய்த பின் ஆள்பதி பிறவுண்றிக் கொழும்புக்கு மீண்டார். அவர் பதினைந்து மாத காலம் கண்டியில் வாழ்ந்தார் என்பர். டொயிலி செய்த சேவையைப் பாராட்டிய பிரித்தானிய அரசாங்கம் அவருக்குப் பெரியபிரபுப்பட்டம் அளித்துக்கௌரவித்தது.

அரசியற்பரிபாலனத்தின் பொருட்டு கண்டி பதினொரு பிரிவுகளாப் பிரிக்கப்பட்டு அவற்றில் ஆங்கில உத்தியோகத்தரே நிர்வாகிகளாய் நியமிக்கப்பட்டார்கள். திசாவைகள் பழைய செல்வாக்குகள் நீக்கப்பட்டவராய் சம்பளம் பெறும் உத்தியோகத்தராயே இருந்தார்கள். மகா திசாவை என வழங்கிய கெபிற்றிபொல 26.11.1818 இல் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டார். கொலைஞன் அவருடைய தலையைத் துண்டிக்கு முன் அவர் புத்தரின் புனிதப் பல்லுக்குத் துதி கூறிவிட்டுத் தானமும் செய்துவிட்டுப் புன் முறுவலோடு மரணத்தை வரவேற்றார். அவருடைய மூளையை ஆராய விரும்பிய ஆங்கிலேயர் அவர் மண்டையைத் தமது மூளையாராய்ச்சிச் சாலைக்குக் கொண்டு சென்றனர் என்பர். ஸ்கொட்லாந்தில் அவருடைய அபார மூளை ஆராயப்பட்ட பின் அவருடைய மண்டையோடு தகுந்த மரியாதையோடு கண்டியில் வீரருக்குரிய நடுகல் நினைவுத்தூணின் கீழ் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. தலைசிறந்த தேசிய வீரராய கெபிற்றிப்பொல மகா திசாவைக்குப் பெரிய சிலையெழுப்ப வேண்டும் என்பதே கண்டி மக்களின் பெரு விருப்பமாகும்.

கண்டியில் நடந்த எதிர்க் கிளர்ச்சியைப் பற்றிப் பிற்காலத்தில் குறிப்பிட்டு எழுதிய உயர் நீதி மன்ற நீதியரசர் லோறிஸ் அவர்கள் எழுதியவை இங்கே குறிப்பிடத்தகுந்தவை. "ஆங்கிலேயர் 1818 ஆம் ஆண்டில் இலங்கையில் நடந்துகொண்டமைக்கு வெட்கப்படாமல் இருக்க இயலாது. கண்டிப் பிரமுகர்களின் குடும்பத் தலைவர் எனக் கணிக்க ஓர் ஆண் மகனை

### மீள் பார்வை

யாவது விட்டு வைக்காமல் அவர்கள் குரூரமாகக் கொன்றார்கள். அவர்களுடைய வாளுக்கும் துப்பாக்கிக்கும் தவறியவர்களை கொள்ளை நோயும் பிளேக்கும் கொன்றுவிட்டன. அதனால் கண்டியருள் பெரியவர்கள் இல்லாது போனார்கள். எஞ்சிய வகுப்பினர் படிப்பு வசதியில்லாமலும் பொருளாதார வசதியில்லாமலும் பற்றாக்குறையால் வாடி வதங்கினார்கள்."

### தனியாட்சி முறை

இலங்கை அரசியல் வளர்ச்சியைப்பற்றி எழுதும் அரசியற் பண்டிதர்கள் இலங்கையில் ஆங்கிலேயர் அரசு நிலைபெற்ற காலத்தை - 1796ஆம் ஆண்டு முதல் 1948ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தை ஏழுபிரிவாகப் பிரித்துள்ளார்கள். முதலில் 1796ஆம் ஆண்டு முதலாக1798 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தைப்படைப்பாலன காலம் என்பர். இரண்டாவது 1801ஆம் ஆண்டு முதல் 1833 வரையுள்ள காலத்தை அரசாங்க குழுவின் ஆலோசனையுடன் ஆள்பதி அரசாண்ட காலம் என்பர். மூன்றாவதாக 1833 தொடக்கம் 1920வரை சட்டசபையில் உத்தியோகஅங்கத்தவர் பெரும்பான்மையினராய் இருந்த ஆட்சிக் காலம் என்பர். நான்காவது 1920 தொடக்கம் 1924 வரை சட்டசபையில் உத்தியோகப் பற்றற்றவரும் தெரியப்பட்டவருமான பிரதிநிதிகள் பெரும்பான்மையினராய் இருந்தஆட்சிக் காலம் என்பர். அதுவே பொறுப்பில்லாத செல்வாக்குக் காலம் எனவும் பேசப்படுவது.

ஐந்தாவது 1931-1947 அரசாங்க சபைக் காலத்து இரட்டை ஆட்சி. ஆறாவது1947-1948பாராளுமன் றத்தின் உள்ளூர் அலுவல்களில் பூரண பொறுப்பாட்சி. ஏழாவது 1948 தொடக்கம் பொது நலவா யத்துள் பூரண சுதந்திரவாட்சி.


இவற்றுள்இரண்டாவதாகச் சொல்லப்பட்ட அரசாங்கக் குழுவுடன் ஆள்பதி அவர்களின் ஆட்சிக் காலத்தைத் தனியாட்சி என்றும் கூறலாம். ஏனெனில் ஆள்பதி அவர்கள் தமக்கு ஆலோசனைகூறிய அரசாங்க உத்தியோகத்தர் குழுவின் கருத்துக்களுக்குச் செவிமடுக்க வேண்டும் என்ற நிபந்தனை இருக்கவில்லையாதலால் ஆள்பதியவர்களுடைய தனியாட்சியே இக்காலத்தில் நடைபெற்றதெனலாம். இக்காலம் பல வேறு நிகழ்ச்சிகளால் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஆள்பதி நோத் அவர்களுக்குப் பின்னர் சேர் தோமஸ்மெயிற்லன் அவர்கள் ஆள்பதியாக இங்கே வந்தார். அவர் இலங்கைக்கு வருமுன் நல்லபடைப் பயிற்சி பெற்று இந்தியா முதலாயஇடங்களில் போர்முகங்களைக் கண்டுஅனுபவம்பெற்றவர். இந்தியாவிலே

**க.சி.குலரத்தினம்**

கல்கத்தாவிலே கைதர் அலியோடு போரிட்டு இராசப் பிரதிநிதியாய கோனவாலிஸ் பிரபுவால் பாராட்டப்பட்டவர். அவரது அரிய சேவைகளுக்குப் பிரதியுபகாரமாக அவரைக் கோமறைக் கழகத்தில் அங்கத்தவராக்கி ஆண்டு தோறும் 1500பொன் படிகொடுத்துக் கௌரவித்துக் கிழக்கிந்திய வர்த்தக சபையில் இயக்குநராகவும் நியமித்துப் பெரிய வருமானத்துக்கு வழிசெய்தார்கள். (தொடரும்)







அண்மையில் இடம்பெற்ற யாழ். இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் க.கணேஷ், திருமதி பரமேஸ்வரி கணேஷ் ஆகியோர் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா மற்றும் ஆசிரியர்களினால் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், மங்கல விளக்கேற்றல் நிகழ்வை இரண்டாவது படத்திலும், கல்லூரியின் ஆசிரியரும் நலன்புரிக் கழகத் தலைவருமான வா.சிவராஜா பிரதம விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# எதிர்கால நோக்கில் ஆரம்பக்கல்வி

(நேற்றைய தொடர்ச்சி)

### ஆரம்பக் கல்வி நடவடிக்கைகளில் அரசின் பங்களிப்பு

"எல்லோருக்கும் கல்வி", "இலவச கட்டாயக் கல்வி" என்பதில் இலங்கை அரசு இன்று முழுக் கவனத்தையும் அதன்பால் திசை திருப்பியுள்ளது. இதன் அடிப்படையில் நகரங்கள், கிராமங்கள் தோறும் பல ஆரம்பப் பாடசாலைகள் நிர்வகிக்கப்பட்டு அரசின் மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வருகின்றன.

பிள்ளைகள் தாய்மொழியில் அல்லது தாம் விரும்பிய மொழியில் கற்பதற்குப் போதிய சுதந்திரம் வழங்கப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தமட்டில் அரச பாடசாலைகள் சிங்களமொழி மூலமாகவும், தமிழ்மொழி மூலமாகவும் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படுகின்ற போதும் இன்று சில தனியார் ஆரம்பப் பாடசாலைகளோடு அரச பாடசாலைகளும் ஆங்கிலமொழி மூலப் போதனையில் கரிசனை காட்டி வருகின்றன.

ஏறக்குறைய 10,000 ற்கு மேற்பட்ட பாடசாலைகள் இன்று ஆரம்பப் பாடசாலைகளாகச் செயற்பட்டு தரம் 5 வரையுயுள்ள வகுப்புகளோடு தரம் 11 வரையுள்ள வகுப்புக்களையும் கொண்டு செயற்படுகின்ற அதே வேளை ஏறக்குறைய 3,000 ற்கு உட்பட்ட பாடசாலைகள் தனித்து தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையுள்ள ஆரம்பக் கல்வியை மட்டும் வழங்குகின்றன.

ஒரு நாட்டின் சிறப்பான எதிர்காலம் அந்நாட்டில் சிறுவர்களுக்கு வழங்கப்படும் கல்வியின் தரத்தைப் பொறுத்து அமைவதாகும் என்ற வகையில் இத்தகைய ஆரம்பக் கல்வியில் அரசு அதிகளவு கரிசனை கொண்டுள்ளது. எனினும் கிராமப்புறப் பாடசாலைகளுக்கும், நகரப் புறப் பாடசாலைகளுக்கும் இடையில் வளங்கள்ளைப் பெறுத்து வேறுபாடு காணப்படுகின்றமை போல மாவட்டங்களுக்கிடையிலேயும் இத்தகைய வளப்பகிர்வில் வேறுபாடு காணப்படுகின்றது.

நாட்டின் அசாதாரண சூழல் காரணமாக சில பாடசாலைகள் இன்று அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் இயங்கி வருகின்றன. தமிழர் பிரதேசத்தில் உள்ள இத்தகைய பாடசாலைகள் சில மூடப்பட்டும், சில மூடப்படும் அபாய நிலையிலும் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பொருத்தமான பயிற்சித் திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் இன்றும் எல்லா ஆசிரியர்களுக்கும் அப் பயிற்சித் திட்டங்கள் சென்றடையவில்லை. இன்று கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் போன்றன ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியை வழங்கி வருகின்றன.

இதற்கான துணை நூல்களும், வழிகாட்டி நூல்களும் (Modules) அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் இடைநிலைத் தரங்களில் கற்பிப்பதற்கே விரும்புகிறார்கள். அவர்கள் தம் கல்வித் தரங்களை அதிகரிக்கும்போது அதே பாடசாலையில் இடைநிலைத் தரவகுப்புகள் இருப்பின் அப் பதவிகளைக் கோருகின்றனர். இதனால் அனுபவமுள்ள ஆசிரியர்கள் பலர் இடைநிலைக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதையும் காணமுடிகின்றது. சில ஆசிரியர்கள் மத்தியில் ஆரம்பக் கல்விப் பிரிவில் கற்பிப்பது தாழ்வானது என்ற எண்ணத்தையும் உண்டாக்குகின்றது.

ஆயின் ஆரம்பக் கல்விப் பயிற்சியை வழங்கும் நிறுவனங்களில் கூட விரிவுரையாளர்கள் குறை வாகவேயுள்ளனர். அரசின் நிதி ஒதுக்கீடும் கணிசமான அளவில் இருந்த போதும் எதிர் காலத்தில் சில விடயங்களையும் அரசு உன்னிப்பாக அவதானிக்க வேண்டுமென்று கருதப்படுகின்றது.

- பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் தொகையிலும் விகிதாசாரத்திலும் அதிகரிப்பை ஏற்படுத்துதல்
- ஆசிரிய கல்வியியலாளர்களின் தொகை யை அதிகரித்தல்.
- அவர்கள் எவ் வகுப்புகளில் கற்பிப்பதற்குப் பயிற்றப்பட்டார்களோ அவ் வகுப்புகளில் கற்பிப்பதற்கு அனுமதிக்கப்படல்.
- ஆரம்பக் கல்விக்கான தர உள்ளீடுகளை (Quality inputs) வழங்குவதிலும் தெளிவான நோக்கைக் கொண்டிருத்தல்.
- சிறந்த முகாமைத்துவ ஒழுங்கு செய்யப்பட்டிருத்தல்
- சிறந்த தொழில் நுட்பங்களோடு கூடிய கற்பித்தலை மேற்கொள்ள வேண்டி அதற்குரிய உபகரணப் பயன்பாட்டினை அதிகரித்தல். (தொடரும்)

கலாநிதி திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம்
கல்வியியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

உதைபந்தாட்ட நாயகன் அமரர் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவாக
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும்
உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி -2008
இன்று
- நெடியகாடு எதிர் றேஞ்சர்ஸ்
- சென்சேவியர் எதிர் வல்லை வி.க
மைதானம்:வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுத்திடல்

# ஒபாமாவுக்கு ஆதரவாக பிரச்சாரத்தில் ஈடுபட கிளிண்டன் விருப்பம் தெரிவிப்பு

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலில் ஜன




நாயகக் கட்சி வேட்பாளர் ஒபாமாவுக்கு ஆதரவாக பிரச்சாரத்தில் ஈடுபடப்போவதாக முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் தெரிவித்துள்ளார். வோஷிங்டன் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தான் ஒபாமாவுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசியதாகவும் இந்தப் பேச்சு பயனுள்ளதாக அமைந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எப்போதெல்லாம் தான் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று ஒபாமா விரும்புகிறாரோ அப்போது அவருக்காக பிரச்சாரம் செய்ய தான் தயாராக இருப்பதாக இவர் இதன் போது தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி பதவி வேட்பாளர் தெரிவுக்காக முன்னர் கிளிண்டனின் மனைவி கிளாரி கிளிண்டனுக்கும்



ஒபாமாவுக்கும் இடையே கடும் போட்டி நிலவி வந்தது. இதன் போது ஒபாமா வெற்றி பெற்று ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தேர்ந் தெடுக் கப்பட் டார்.

இந்த நிலை யில் இவர் ஒபா மாவுக்கு ஆத ரவாக பிரச் சாரம் செய்ய விருப்பம் தெரிவித்துள் ளமை யானது ஒபாமாவின் வெற்றி வாய்ப்பை மேலும் அதிகரித்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஓ

## கொலம்பியாவில் ஜனாதிபதி தேர்தல் நடத்த தீர்மானம்

(கொலம்பியா)

கொலம்பியாவில் நம்பிக்கை வாக் கெடுப்பு ஒன்றை நடத்துவதைவிட ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வதற்கு ஜனாதிபதி அல்பாரோயூறிபி தீர்மானித்துள்ளார்.

இலஞ்சக் குற்றச் சாட்டை எதிர்கொண்டுள்ள ஜனாதிபதி யூறிபி 2006ஆம் ஆண்டு நடைபெற்ற தேர் தலில் பெற்ற அதே வாக்கு வீதத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியும் என நம்பிக்கை தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி யூறிபி மீண்டும் ஒரு தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் அந்நாட்டின் அரசியல் யாப்புத் திருத்தத்தில் வழங்கப் பட்டிருப்பதாக கொலம்பிய உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதன் மூலம் தன்மீதான ஊழல் குற்றச் சாட்டில் இருந்து தப்பிக்க அவருக்கு வழி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஓ

# நெல்சன் மண்டேலாவின் 90ஆவது பிறந்த நாள்

சொந்தக் கிராமத்தில் ஆர்ப்பாட்டமின்றி நடைபெற்றது

(தென்னாபிரிக்கா)

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, கடந்த வெள்ளிக்கிழமை தனது 90 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

தனது பிறந்த நாளை முன்னிட்டு கடந்த சில வாரங்களாக உலகின் பல நாடுகளுக்கும் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டிருந்த நெல்சன் மண்டேலா, தனது பிறந்த தினத்தை தனது குடும்பத்துடன் தனது சொந்த கிராமமான குனுவில் அமைதியாக கொண்டாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அவரின் பிறந்த நாளையொட்டி சனிக்கிழமை சுமார் 500பேர் வரை கலந்து கொள்ளும் விருந்துபசார வைபவமொன்று நடைபெற்றது.

27 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த அவர் தென் ஆபிரிக்காவின் முதலாவது கறுப்பினத் தலைவர் என்ற பெருமையை பெறுகிறார்.



1999ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவியிலி ருந்து விலகிய நெல்சன்மண்டேலா எயிட்ஸ் நோயுக்கு எதிரான பிரசாரத்தில் ஆபி ரிக்காவின் உயர் மட்ட தூதுவ ராக விளங்கி னார். 2004ஆம் ஆண்டு தனது 85ஆவது வயதில் பொது வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்ற அவர், தனது குடும்பம் மற்றும் நண் பர்களுடன் இணைந்து அமைதியாக தனது வாழ்வை கழித்து வந்தார்.

அதேசமயம் நெல்சன் மண்டேலா தனது மூன்றாவது மனைவியான கிரேகா மாசெலை திருமணம் செய்து 10ஆவது ஆண்டு விழாவும் வெள்ளிக்கிழமையே என் பது குறிப் பிடத்தக்கது. நெல்சன் மண்டேலா தொடர்பில் கிரேகா மாசெல் விபரிக்கையில், அவர் மிகவும் அற்புதமான கணவர். நாங்கள் ஒவ்வொரு தினத்தையும் மிகவும் மகிழ்ச்சியுடன் கழித்தோம் என்று கூறினார். ஓ

# நேபாளத்தின் முதலாவது ஜனாதிபதி தேர்தலில் முதன்மை வேட்பாளராக ராம்ராஜா பிரசாத்சிங்

## 4 உப ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவர் பெண்

(காத்மண்டு)

நேபாளத்தின் முதலாவது ஜனாதிபதி தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பில் அந்நாட்டின் மூன்று பிரதான கட்சிகளைச் சேர்ந்த மூவர் போட்டியிடுகின்றனர்.

நேபாள மாவோ வாத கட்சியைச்சேர்ந்த ராம் ராஜா பிராசாத்சிங் (73வயது) நேபாள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மருத்துவ கலாநிதி ராம்பரன் யாதவ் (61வயது) நேபாள் யு.எம்.எல் கட்சியைச் சேர்ந்த இராம்பிரீத் பஸ்வான் (55வயது) ஆகியோரே நேபாள ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் ஆவர்.

மேற்படி மூன்று வேட்பாளர்களும் நேபாளத்தின் பிரச்சினைகள் நிறைந்த தென் பிராந்திய பகுததியான மத்ஹெஸை சேர்ந்தவர்களாவர்.

இந்நிலையில் மேற்படி ஜனாதிபதி தெரிவுக்கான முன்னணி வேட்பாளராக ராம்ராஜா பிரசாத்சிங் விளங்குவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ராம்ராஜா பிரசாத்சிங்குக்கு நேபாளத்தின் தென்பகுதியில் உள்ள 6கட்சிகளின் ஆதரவு இருப்பதாக கூறப்படுகிறது. அவரது வேட்பாளர் நியமனம் குறித்து மாவோவாத கட்சியின் தலைவர்களின் ஒருவரான பாபுராம் பத்தாரேய் விபரிக்கையில், நேபாளகுடியரசின் போராட்டத்துக்கு நீண்டகாலம் பங்களிப்புச் செய்தவர் என்ற வகையிலேயே ராம்ராஜா பிரசாத் சிங்கை வேட்பாளராக தெரிவுசெய்துள்ளதாக கூறினார்.

நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு முடிவு கட்டி அந்நாட்டை குடியரசாக மலரச்செய் வதற்காக குரல் கொடுத்த ராம்ராஜா பிரசாத் சிங் 1996ஆம் ஆண்டு மாவோவாதிகளின் அயுதப் போராட்டம் அரம்பமாகிய போது குண்டு தயாரிக்கும் தொழில்நுட்பம் தொடர்பில் அவர்களுக்கு உதவியளித்தவர் ஆவார்.




தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விசேட அரசியல் அமைப் பொன்றின் அமுல் ஆக்கத்தை உறுதிப் படுத்த விரும்புவதாக ராம்ராஜா பிரசாத்சிங் தெரிவித்தார்.

நேபாள பாராளுமன்றம் ஆனது மேற்படி புதிய அரசியல் அமைப்பை எதிர்வரும் இரு வருட் காலப் பகுதிக்குள் தயாரித்து அமுழ்ப் படுத்த எதிர்பார்த்துள்ளது.

இதன்போது உபஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது.

உப ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பும் நடை பெறவுள்ளது. உபஜனாதிபதி பதிவிக்காக போட்டியிடும் நாலு வேட்பாளர் களில் ஒருவர் பெண் ஆவார்.

பாராளுமன் றத்திலான சாதாரண பெரும்பான்மை வாக்குகளின் மூலம் மேற்படி ஜனாதிபதித்தேர்வு இடம் பெறவுள்ளது. ஓ

# நேபாள முன்னாள் இளவரசி ஹிமானி பிள்ளைகளுடன் நாட்டைவிட்டு வெளியேற்றம்

(காத்மண்ட்)

நேபாளத்தின் முடிக்குரிய இளவரசி



நேபாள திரிபுவன் சர்வதேச விமானநிலையத்தில் முன்னாள் இளவரசி தனது 3 பிள்ளைகளுடன்

ஹிமானி ஷா, தனது 3பிள்ளைகளுடன் சிங்கப்பூர் பயணமாகியுள்ளார்.

அவர்கள் நேபாள தலைநகர் காத்மண்டுவிலுள்ள திரிபுவன் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சில்க் எயார் விமான சேவை விமானமொன்றில் மேற்படி பயணத்தை மேற்கொண்டதாக கூறப்படுகிறது.

ஹிமானி ஷாவின் கணவரும் முன்னாள் முடிக்குரிய இளவரசருமான பாராஸ்ஷா, இரு வாரங்களுக்கு முன் சிங்கப்பூருக்கு புறப்பட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஹிமானி ஷா, தனது பிள்ளைகளான பூர்ணிகா, கிரித்திகா மற்றும் ஹரிதயேந்திரா ஆகியோருடன் சிங்கப்பூர் சென்றுள்ளதை அந்நாட்டு குடியகல்வு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். ஓ

## உலக தரிசனம்

# உலகிலேயே சிறந்த விமான நிலையமாக ஏழாவது முறையாக இடம்பிடித்தது ஹொங்கொங்

(பிரிட்டன்)

உலகிலேயே தலை சிறந்த விமான நிலையமாக தொடர்ந்து ஏழாவது முறையாக ஹொங்கொங் விமான நிலையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனை சேர்ந்த ஸ்கைடிராக்ஸ் நிறுவனம் ஆண்டு தோறும் சிறந்த விமான நிலையங்களை பல்வேறு பிரிவுகளாக பிரித்து வெளியிட்டு வருகிறது.

10மாதங்கள் பயணிகளிடம் இருந்து சேகரிக்கப்பட்ட 80 லட்சம் பதில்களை அடிப்படையாகக் கொண்டு இந்த பட்டியல் வெளியிடப்படுகிறது. ஷாப்பிங் உணவகங்கள், பணியாளர்களின் நடத்தை லக்கேஜ் டெலிவரி, காத்திருக்கும் நேரம், பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்வற்றின் அடிப்படையில் 190 விமான நிலையங்கள் தரம் பிரிக்கப்பட்டுள்ளன.

ஆசியாவை சேர்ந்த அனைத்து விமான நிலையங்களும் சிறப்பாக செயற்பட்டாலும் வசதிகள் அனைத்தும் மிக திருப்திகரமாக இருப்பதால் சிங்கப்பூர் விமான நிலையத்தை பின்னுக்கு தள்ளி ஹொங்கொங் விமான நிலையம் முதலிடத்தை பிடித்துள்ளது.

2006ஆம் ஆண்டைத் தவிர தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக ஹொங்கொங் விமான நிலையம் முதலிடத்தில் உள்ளது.

2006ஆம்ஆண்டு சிங்கப் பூரின் ஷாங்கி விமான நிலையம் முதலிடத்தை பிடித் துள்ளது. ஹொங்கொங் சிங்கப்பூரை தொடர்ந்து கோலாலம்பூர், மலேசியா, ஜப்பானின் கன்சாய், ஜெர்மனியின் முனிச் விமான நிலையங்கள் அடுத்தடுத்த இடத்தை பிடித்துள்ளன. ஓ

# பாலியல் வன்செயல்கள் குறித்து போப்பாண்டவர் வருத்தம்

உலகில் உள்ள வளங்களெல்லாம் மன நிறைவளிக்காத நுகர்வால் வீணாவதாக போப்பாண்டவர் பெனடிக்ட் ஆஸ்திரேலியாவில் ஆயிரக்கணக்கான ரோமன் கத்தோலிக்கர்களுக்கு மத்தியில் நிகழ்த்திய உரையின் போது கூறியுள்ளார்.

சிட்னி நகரில் கத்தோலிக்க இளைஞர் விழாவில் பேசிய அவர் வெகுஜன கலாச்சாரத்தில் பாலியல் மற்றும் வன்முறைகள் ஊக்கப்படுத்தப்படுவதையும் குறை கூறினார்.

அதேநேரத்தில் கத்தோலிக்க மதகுருமார்களால் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டவர்களிடம் போப்பாண்டவர் மன்னிப்பு கோருவார் என்றிருந்த எதிர்பார்ப்பு



நிறைவேறவில்லை அவர் அதைப் பற்றி ஏதும் பேசவில்லை. ஓ

நெற்றியைக் காயப்படுத்துவதைவிட முதுகை வளைத்துச் செல்வது நல்லது.
-இங்கிலாந்து

வலம்புரி

## சி.டி.எம்.ஏக்கு எதற்காக பொலிஸ் கிளியரன்ஸ்

சி.டி.எம்.ஏ பாவனையாளர்கள் பொலிஸ் கிளியரன்ஸ் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான படிவமும் யாழ்.ரெலிக்கொம் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

நாட்டின் தென்பகுதியில் எதுவிதமான சட்டதிட்டங்களுக்கும் உட்படாமல் சி.டி.எம்.ஏயை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்போது யாழ்ப்பாணத்தில் மட்டும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இதில் வேடிக்கை என்னவெனில் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் சி.டி.எம்.ஏ பெறுவதற்கு படைத்தரப்பிடம் இருந்து கிளியரன்ஸ் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

அவ்வாறு படைத்தரப்பின் கிளியரன்ஸ் கிடைத்த பின்னரே சி.டி.எம்.ஏ வழங்கப்பட்டது. சிறிலங்கா ரெலிக்கொம், தான் நிர்ணயித்த சி.டி.எம்.ஏ இணைப்புக்களின் உச்சமான எல்லைவரை அவற்றை வழங்கியதும் அந்த இணைப்புக்கள் செயலிழந்து போயின.

படையினரின் அறிவுறுத்தலுக்கு அமையவே அவை செயலிழக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கும் அதேநேரம், இப்போது சி.டி.எம்.ஏ. இணைப்பிற்கு பொலிஸ் கிளியரன்ஸ் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

படையினரின் கிளியரன்ஸுக்கு மேலாக பொலிஸ் கிளியரன்ஸ் எதற்காக எடுக்க வேண்டுமென்ற கேள்வி பாவனையாளர்களிடையே மௌனமாக ஒலிக்கின்றது.

இதற்கு மேலாக பொலிஸ் கிளியரன்ஸ் உடனடியாக கிடைக்குமா? அல்லது பொலிஸ் கிளியரன்ஸை சாட்டாக வைத்து சி.டி.எம்.ஏக்களின் செயலிழப்பு நீடிக்கப்படுமா? பொலிஸ் கிளியரன்ஸ் கிடைக்கப்பெற்றதும் உடனடியாகவே சி.டி.எம்.ஏ இயங்கத் தொடங்கிவிடுமா? என்ற வினாக்கள் பொதுமக்களிடையே முட்டி மோதுகின்றபோதும் தமிழர்களாக பிறந்த நாம் கேள்வி கேட்கும் உரிமையற்றவர்கள் என்ற நிஜத்துடன் அவர்கள் மௌனமாகிப் போகின்றார்கள்.

எதுவாயினும் சி.டி.எம்.ஏ இணைப்புக்களை இயங்க வைப்பதில் சிறிலங்கா ரெலிக்கொம்மிற்கு பாரிய பொறுப்புண்டு.

கட்டணங்களை பெற்று இணைப்புக்களை வழங்கிவிட்டு அது விடயத்தில் பேசாமல் இருப்பது அத்தியாவசிய சேவையை வழங்கும் ஓர் அமைப்பிற்கு அழகல்ல.

எனவே இது விடயத்தில் சிறிலங்கா ரெலிக்கொம்மின் தலைமை விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் சிறிலங்கா ரெலிக்கொம் என்பது ஓர் சாதாரண அமைப்பு அல்ல. அது பலமான சக்தியை -பின்புலத்தை கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சி.டி.எம்.ஏ இணைப்புக்களை வழங்குவதற்கான படைத்தரப்பின் அனுமதியை பெற்ற அந்த அமைப்பிற்கு இணைப்புக்களை இயங்க வைப்பதில் அதிக இடைஞ்சல் இருக்காது என்பதால் அந்த அமைப்பு தனது கடமையை பொறுப்புடன் செயலாற்ற முன்வரவேண்டும்.

# மோசமான நாடுகளின் வரிசையில் இலங்கையையும் இணைக்கும் அபாயம்

## பொஸ்டன் க்ளோப் இணையத்தளம் செய்தி

(கொழும்பு)

உலகின் மோசமான இராச்சியங்களில் ஒன்றாக மாறக்கூடிய அபாய நிலையை மஹிந்த ராஜபக்ஷவின் இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளதாக பொஸ்டன் க்ளோப் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

சூடான், பர்மா,சிம்பாவே போன்ற மோசமான நாடுகளின் வரிசையில் சேர்க்கப்படக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கைஇனப்பிரச்சினைக்கு ஒரு போதும் இராணுவ ரீதியான நடவடிக்கைகளின் மூலம் தீர்வுஎட்டப்பட முடியாது எனவும் தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்கக் கூடிய அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை மஹிந்த ராஜபக்ஷஅரசாங்கம் விரைவாக முன்வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்குடாநாட்டில் உள்ள அப்பாவிப் பொதுமக்கள் மீது கண் மூடித் தனமான குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தின் காரணமாக பொது மக்கள் எதிர் நோக்கியுள்ள பல்வேறு அசௌகரியங்களுக்குஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ உடனடியாக தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோதமானமுறையில் தமிழ் மக்கள் அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிப்பதாகச் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தகவல் வெளியிட்டுள்ளது.

சீனா,இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுபெற்றுக் கொடுக்கக் காத்திரமான பங்களிப்பை நல்கவேண்டியது இன்றியமையாததெனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

தமிழ் மக்களின் சுயாட்சி அதிகாரங்களுக்கு மதிப்பளிக்கக் கூடிய ஓர்தீர்வுத் திட்டம் குறித்துமஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அதிக கவனம்செலுத்த வேண்டும் எனவும் யுத்தம் மூலம் இனப்பிரச்சி னைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க முடியாதெனவும் பிரபல பொஸ்டன்க்ளோப் இணையத்தளம் செ ய்தி வெளியிட்டுள்ளது.

ஓ

# கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உட்பூசல் எமது வெற்றியினை இலகுபடுத்தியுள்ளது

## அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் க்ட்சிக்குள்ளும் ஜே. வி. பி. க்குள்ளும் உட்பூசல்கள் அதிகரித்துள்ள நிலையிலேயே வட மத்தியத்தி சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுகின்றன. இது எமது வெற்றியை இலகுபடுத்தியுள்ளது என தகவல் தொடர்பாடல் துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அநுராதபுரம் கிழக்கு தேர்தல் தொகுதி அமைப்பாளரும் மாகாண சபை வேட்பாளருமான எச். பீ. சேமசிங்க ஒழுங்கு செய்த பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அதன் பிரபல உறுப்பினர்கள் பலர் எம்முடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ளனர்.

கட்சியின் தலைமையின் மீது வெறுப்புக் கொண்ட இவர்கள் எம்முடன் இணைந்து செயற்படுகிறார்கள். அத்தோடு எஞ்சியிருப்பவர்களில் சிலரும் தலைமைத்துவத்தை மாற்றியமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதனாலேயே ஐக்கிய தேசிய கட்சியால் சிறப்பான முதலமைச்சர் வேட்பாளர்களைக் கூட கண்டு பிடிக்க முடியவில்லை.

அவுஸ்திரேலியாவிலிருந்து வந்த ஒருவரையும் நடிகர் ஒருவரையும் தலைமை வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளது. இந்நிலையே ஜே. வி. பி. க்கும் . அக் கட்சி பிளவுபட்டு சின்னாபின்னமாகியுள்ளது. எனவே, இக்கட்சிகள் இரண்டாலும் இம் மாகாண சபைத் தேர்தல்கள் மட்டு மல்ல எந்த ஒரு தேர்தலிலும் இனிமேல் வெற்றி பெற முடியாது. நாம் எமது கட்சியுடன் சேர்ந்து ஜே.வி.பி. யை பொதுத் தேர்தலில் போட்டியிட அனுமதித்ததினாலேயே 38ஆசனங்கள் அவர்களுக்குக் கிடைத்தன. எனினும், ஜே.வி. பி. எமக்கு பின்னாலிருந்து முதுகில் கத்தியால் குத்துவது போன்ற செயல்களிலேயே ஈடுபட்டது வட மத்திய மாகாண சபை கலைக்கப்படவும் பிரதான காரணம் அவர்களே

நாட்டிலுள்ள 80 சதவீதமான மக்கள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். நாட்டின் ஒரு மைப்பாட்டுக் கென பாடுபடும் தலைவரை மக்கள் மதிக்கவே செய்வர். இவ்வாறான நம்பிக்கையின் வெளிப்பாடே அண்மையில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத் தோல்வியாகும்

ஜே. வி. பி. ஆரம்பித்த இவ்வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஆதரவு வழங்கின.

இறுதியில் விடுதலைப் புலிகளும் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாகவே செயற்பட்டனர். எனினும், இந்நாட்டிலுள்ள அர ஊழியர்கள் ஜனாதிபதி மீதும் அரசின் மீதும் நம்பிக்கை கொண்டு வேலை நிறுத்தத்தில் ஈடு படாது தவிர்த்துக் கொண்டனர். இது வரவேற்கத்தக்க தொரு முடிவாகும்.

கமநெகும, மகநெகும திட்டங்களின் மூலம் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. யுத்தம் ஒரு பக்கத்தில் நடைபெற்றாலும் விசாலமான அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இராணுவ வெற்றிகளும் தொடராக கிடைத்து வருக்னறன. யுத்தத்துக்காக அரசு பெருமளவு பணத்தைச் செலவிடுகின்றது. ஒரு தடவை விமானத்தாக்குதல் ஒன்றை நடத்த ஐம்பது இலட்சம் ரூபாவிற்கு மேல் செலவிடப்படுகின்றது.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் நாட்டைச் சிறப்பாக வழிநடத்துவதனாலேயே ஐ. தே.க. ,ஜே.வி. பி. ஆதரவாளர்கள் இம்மாகாண சபைத் தேர்தலில் எமது வேட்பாளர்களை ஆதரிக்க முன்வந்துள்ளார்கள்.

தற்போதும் பல நூற்றுக்கணக் கானவர்கள் எம்முடன் இணைந்து கொண்பார்கள். நாம் கிழக்கை மீட்டெடுத்து அங்கு நடைபெற்ற தேர்தலிலும் பெரு வெற்றியீட்டினோம். வட மத்திய மாகாண சபைத் தேர்தலிலும் அமோக வெற்றியீட்டுவோம் என்பதில் ஐயமில்லை என்றார். ஓ

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் வல்லை முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை அனுசரணையுடன் இன்று ஞாயிற்றுக் கிழமை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

காலை 9.30 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணிவரை நடைபெறும் இரத்ததான நிகழ்வில் அப்பகுதி வாழ் மக்கள் பங்கு பற்றவுள்ளார்கள்.

பருத்தித்துறை செஞ்சிலுவைச் சங்க அனுசரணையில் இப்பகுதி மக்கள் 4 மாதத்திற்கு ஒரு தடவை இரத்த தானம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

(ஓ-4)

# இறையாட்சியின் சொந்தக்காரர்கள்

இறைவன் உலகைப்படைத்த போது அனைத்தையும் நல்லதெனக்கண்டார் அவ்வாறு இருக்க எவ்வாறு தீமைகளும்தீயவர்களும் பெருகினார்கள்? எனவே இது கடவுளின் படைப்பல்ல மாறாக அலகையின் 'வேலைப்பாடுகள் .

இறைவனின் வார்த்தையை மீறி அலகையின் மாயக்கவர்ச்சிக்கு மனிதன் அடிமையாகி ஆணவம்அடைந்தானோ அன்றே தீமைகளும் தீயவர்களும் பெருகி இன்று ஆலமரம்போல்பரந்து விரிந்து விழுதுகள் விட்டுவிட்டன.

உலகில் நல்லவனும் இருக்கிறான் தீயவனும் இருக்கிறான் புண்ணியவானும் இருக்கின்றான். பாவியும் இருக்கின்றான் காந்தி பிறந்த மண்ணில் தானே கோட் சேயும் பிறந்தான் அன்னை திரேசா வாழ்ந்ததும் அதே கால கட்டத்தில் தான் எனவே உலகம் இருக்கின்ற வரை தீமைகளை ஆனால் தீயவர்களை மாற்ற முடியும் அதற்கு நாம் அனைவரும் மற்றவரை அவராக ஏற்று அன்பு செய்து மன்னித்து உறவோடு வாழ வேண்டும். நல்லவர்கள் தான் வாழ வேண்டும் தீயவர்கள் சாக வேண்டும் என்பது நமது எண்ணம். ஆனால் கடவுளின் எண்ணம் அப்படி அல்ல அவரின் இறையாட்சியின் அனை வருக்கும் சம நீதி உண்டு; சம பங்கு உண்டு; சமபந்தி, சம உரிமை உண்டு காரணம் மனிதனை இறைவன் தனது

### பரமபிதா காட்டிய பாதை

சாயலாகவும் தமது பாவ னையாகவும் படைத்தார். இது தான் இன்றைய நற்செய்தியின் மையக்கருத்து உலகில் நல்லவர்களே இருக்கவேண்டும் தீய வர்கள் அழிய வேண்டும் என்பது மடமை என்பது நற்செய்தியில் யேசு ஆணித்தரமாக சொல்கிறார். தீயவர்களும் திருந்த ஒரு வாய்ப்பு மட்டுமல்ல பல வாய்ப்புகள் தரப்படவேண்டும் அது தான் இறைவனின் இறையாட்சிக் கொள்கை.



நாம்பிறரை எப்படி நடத்துகின்றோமோ அப்படித்தான் அவர்களும் நம்மை நடத்துவார்கள். நாம் எப்படி உருவாக்குகின்றோமோ அப்படித்தான் அவர்களும் உருவாவார்கள் எனவே எல்லோரையும் அவரவராகஏற்று அன்பு செய்து மண்ணில் இறையாட்சியை கட்டியெழுப்புவோம்.

ஜோன் றொபேர்ட்

# குடியிருப்புகளை அகற்றி மக்களை வீதிக்குத் தள்ளுவது

# அரசின் அப்பட்டமான அடிப்படை உரிமை மீறலாகும்

## -கொம்பனி வீதியில் மனோ எம்.பி. பொலிஸாருடன் வாக்குவாதம்



நகர அபிவிருத்தி அதிகார சபையும் பொலிஸாரும் இணைந்து கொம்பனி தெருவில் உள்ள மக்கள் குடியிருப்புகளை அகற்றுவதன் மூலம் அம்மக்களை வீதிக்கு தள்ளுவதானது அரசாங்கத்தின் அப்பட்டமான அடிப்படை உரிமை மீறலாகும் என்று மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கொம்பனி வீதி ரயில் பாதைக்கு இரு மருங்கிலும் அமைந்துள்ள மக்கள் குடியிருப்புகள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் பொலிஸாரின் துணையுடன் அக் குடியிருப்புகளை அகற்றும் நடவடிக்கைகளில் நேற்று ஈடுபட்டனர். அப்போது ஸ்தலத்திற்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கும் பொலிஸாருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.அதன்போது அவர் இவ்வாறு தெரிவித் தார்.

இங்கு கூவிக் கதறி அழுதுகொண்டிருக்கும் மக்களின் நிலைமை குறித்து தெளிவாக எடுத்துக் கூறிய போதும் நீதிமன்றத்தின் உத்தரவானது இம் மக்களுக்கு சார்பாக இருக்கின்றபோதும் ஏன் உங்களைப் போன்ற அதிகாரிகளால் இதனைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது என்றும் ஆவேசமான தொனியில் பொலிஸாரை நோக்கி அவர் கேள்வி எழுப்பினார்.

அப்போது அங்கு வருகைதந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மனோ கணேசன் எம்.பியை சமாதானப்படுத்தினார். அதனையும் மீறி தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் எம்.பி.,

ஏராளமான மக்களின் வீடுகள் உடைத்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. உண்மையில் இது அரசாங்கத்தின் அப்பட்டமான அடிப்படை உரிமை மீறலாகும்.அத்துடன் நீதிமன்றத்தின் உத்தரவு கூட மீறப்பட்டுள்ளமை மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய பாரதூரமான விடயமாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எம்.பிக்கள் பலரதும் தலையீட்டினால் இந்த நடவடிக்கை இப்போதைக்கு நிறுத்தப்பட்டுள்ளது. இதன் பின்னர் இவ்வாறான நாசகார விடயங்களில் அரசாங்கம் அல்லது அதன் அதிகாரிகள் ஈடுபட்டால் இன்றைய தினத்தில் கூடிய மக்களின் தொகையிலும் பார்க்க 10 மடங்கு அதிகமான மக்களை ஒன்று திரட்டி உரிமைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று கூறினார்.

எதிர்க் கட்சித்தலைவருடன் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களான திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க,மொஹமட் மஹ்ரூப் ஆகியோரும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பியும் சம்பவ இடத்திற்கு பிரசன்னமாயிருந்தனர். இதன்போது பாதிக்கப்பட்ட மக்கள், அரசியல் தலைவர்களிடம் தமதுநிலைமையை தெளிவுபடுத்தியதுடன் அரசாங்கத்தின் அடாவடித்தனமான செயற்பாடுகளை இடைநிறுத்தச் செய்யுமாறும் கேட்டுக்கொண்டனர்.

இதனையடுத்து,எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க,பொலிஸாருடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடினார். அப்போது மறுபக்கத்தில் குடியிருப்புக்கள் தொடர்ந்தும் உடைக்கப்படுவதாக பொது மக்கள் கூச்சலிட்டனர். இதனால் பரபரப்பு மேலும் அதிகரித்தது. இதன்போது ஆத்திரமடைந்த ரவி கருணாநாயக்க எம்.பி.பொது மக்கள் அனைவரும் ரயில் பாதையில் அமர்ந்து போராட்டத்தை தொடங்குமாறு பலத்த் குரலில் கூறினார்.

இதனையடுத்து அங்கு குழுமியிருந்த பொதுமக்களில் ஒரு பகுதியினர் தண்டவாளத்தில் அமர்ந்து அரசாங்கத்திற்கு எதிராக கோஷமிட்டனர். இந்நிலையில். ரவி கருணாநாயக்கவுக்கும் பொலிஸாருக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து வீடுகளை உடைக்கும் நடவடிக்கையை நிறுத்துவதாக உறுதிசெய்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த ரவிகருணநாயக்க எம்.பி.,

இன்னும் சில தினங்களில் சார்க் உச்சி மாநாடு இடம்பெறவிருக்கிறது. இந்நிலையில் அரசாங்கம் தனது முட்டாள்தனமான காரியங்களை நடைமுறைப்படுத்து வதன் மூலம் சர்வதேச மட்டத்தில் இலங்கையின் நற்பெயருக்கு களங்கத்தை சம்பாதித்துக் கொடுக்கவே முனைகிறது.

சார்க் தலைவர்களின் பாதுகாப்புக்கென அப்பாவிப் பொதுமக்களின் குடியிருப்புக்களை அகற்றுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

இது அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட சதி நடவடிக்கையாகும். இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி. இடமளிக்கப்போவதில்லை. இதே வேளை பொலிஸ் அதிகாரிகளுக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். பொதுமக்களின் நிலைமைகளை உணர்ந்து செயற்படுவதும் அவர்களுக்கான பாதுகாப்பை வழங்குவதும் பொலிஸாரின் கடமையாகும்.எனவே இது விடயத்தில் பிரதேச வாசிகளை கைது செய்வதோ அல்லது குடியிருப்புக்களை மீண்டும் உடைப்பதோ விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். மீறப்பட்டால் விளைவு பாரதூர மானதாக அமையும் என்றார்.

### ரணில் விக்கிரசிங்க

இங்கு கருத்துத்தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நீதிமன்றத் தீர்ப்புகளை மீறி பொதுமக்களின் வாழ்விடங்களை இல்லாது செய்வது ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரச பயங்கரவாதங்களில் ஒன்றாகும் என தெரிவித்தார்.மேலும் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை அரசாங்கம் மறுக்கும் போது நாம் கூறினாலும் கூறாவிட்டாலும் பொதுமக்கள் வீதிக்கு இறங்குவதைத் தடுக்க முடியாது.

### ரவூப் ஹக்கீம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் கூறுகையில், நீதிக்கு முரணானதும் ஏற்றுக்கொள்ள முடியாததுமான செயற்பாடாகும். இதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது என்றார்.

### இந்தியத் தூதரகத்தில் மகஜர் கையளிப்பு

இதேவேளை நேற்று பிற்பகல் கொழும்பு கொம்பனி வீதி பிரதேசத்தில் குடியிருப்புகள் பலவந்தமாக அகற்றப்பட்டமை தொடர்பில் அப் பகுதி மக்களால் கொழும்பில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# பெற்றோலில் கலப்புத்தன்மையுள்ளதாக வாகன உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

யாழ் . மாவட்டத்தில் வாகனங்களுக்காக விநியோகம் செய்யப்படும் பெற்றோலில் கலப் புத்தன்மை காணப்படுவதாக வாகனங்களின் உரிமையாளர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள்.

கடந்த மாதம் பெற்றோல் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து மண்ணெண்ணை, டீசல் போன்ற பொருட்கள்ள பெற்றோலுடன் கலந்து விற்பதினால் வாகனங்கள் பழுதடைவதும் இடையில் நிற்பது போன்ற சம்பவங்கள் ஏற்பட்டு இருந்ததாக தெரிவிக்கிறார்கள்.

யாழ். மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு புறம்பாக சட்டவிரோதமாக அனுமதி பத்திரங்கள் இன்றி கடைக்கு கடை எரிபொருட்களை விற்பனை செய்வதாகவும் சொல்லப்படு கின்றது.

இவர்களிடம் கொள்வனவு செய்யும் பெற்றோல் மிகவும் தரமற்றதாக காணப்படுவதுடன் இது சம்பந்தமாக வாகன உரிமையாளர்கள் வர்த்தக நிலைய உரிமையாளர்களுடன் கேட்டால் தாம் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து தொழில்கள் இன்மையால் பெற்று விற்பனை செய் வதாக கூறுகின்றார்கள்.

இதேவேளை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வழங்கப்படும் பெற்றோ லில் கலப்புத்தன்மை காணப்படுவதாக வாகன உரிமையா ளர்கள் கூறுகின்றனர். தாம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கும் எரிபொருளையே விற்பனை செய்வதாகவும் எரிபொருள் நிலையங்கள் தெரிவிக்கின்றன. (ஓ)

# மலையகப் பகுதியில் கடும் மழை கினிகத் ஹேனவில் மண்சரிவு

மலையகம் மற்றும் ஏனைய பகுதிகளில் வெள்ளிக்கிழமை இரவு முதல் பெய்து வரும் கடும் மழை காரணமாக பல இடங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதோடு சில இடங்களில் மண்சரிவு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

அட்டன், கினிகத் ஹேன, கித்துள்கலை, எட்டியாந்தோட்டை , அவிசாவளை ஆகிய பகுதிகளில் கடும் மழை பெய்ததால் எட்டியாந்தோட்டை பகுதியில் வெள்ளநீர் வீதிகளில் வழிந்தோடியது.

இதன் காரணமாக அட்டனிலிருந்து இம் மார்க்கம் வழியாக கொழும்பை நோக்கிச் சென்ற வாகனங்கள் அனைத்தும் நேற்று முன்தினம் இரவு பல மணி நேரம் வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

மேலும் நேற்று முன்தினம் அதிகாலை கினிகத் ஹேன தியகலை சோதனை சாவடிக்கருகில் இடம்பெற்ற மண்சரிவு காரணமாக இம்மார்க்கத்தில் போக்குவரத்து சுமார் 5 மணித்தியாலங்கள் வரை பாதிக்கப்பட்டது.

பொலிஸார் பொதுமக்களுடன் இணைந்து சரிந்திருந்த மண்ணை அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதே வேளை எட்டியாந்தோட்டைப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இப்பகுதி கிராமங்களுக்குச் செல்ல பயன்படும் சிறிய பாலங்கள் பல முற்றாக சேதமுற்றிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ)




பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் க.பொ.த ( சா/த) பரீட்சைப் பெறுபேற்றில் சாதனை நிலைநாட்டி யாழ். மாவட்டத்தில் இரண்டாவது இடத்தைத் தட்டிக்கொண்ட 21 மாணவிகளைப் பாராட்டி நடாத்தப்பட்ட விழாவில் அதிபர் திருமதி.எஸ்.சுந்தரேசன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், சாதனை மாணவிகள் அருகில் நிற்பதையும் , ஏ.என்.எஸ்.திருச்செல்வம் வரவேற்புரை நிகழ்த்துவதையும், பிரதம விருந்தினரான பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜி அலெக்ஸ்ராஜா சாதனை மாணவிகளுக்குப் போதித்த ஆசிரியருள் ஒருவரான இ.சிவஞானத்திற்கு பரிசில் வழங்குவதையும், சாதனை மாணவி கே.சுஜனி ஏற்புரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)

# பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயவின் இராணுவ அணுகுமுறைகள் பாராட்டுக்குரியன

## கருணா தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் மீண்டும் நிலைகொள்வதை நினைத்துப் பார்க்க முடியாது. புலிகள் கிழக்கிலிருந்து முற்றாக விரட்டப்பட்டு விட்டார்கள். மக்களுக்கு தலைமை தாங்கும் பொறுப்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளிடமே உள்ளது என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

மட்டக்களப்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் வைத்து ஊடக வியலாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது, கிழக்கு மாகாண மக்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். அதனால், கிழக்கு மாகாண சபையையே எம்மால் கைப்பற்ற முடிந்தது. இரா ணுவத்தில் மிகுந்த ஆளுமை மிக்க கோத்த பாய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராக கடமை புரிவது மிகுந்ததிருப்தி தருகின்றது. அவரது இராணுவ அணுகு முறைகள் பாராட்டுக் குரியவை. எதிர்காலத்தில் எமது கட்சியின் நட வடிக்கைகள் பரவ லாக விரிவுபடுத்தப்படும். கட்சியை கட்டி எழுப்புவதனூடாக கணிசமான பாராளுமன்ற ஆசனங்களைப் பெற முடியும் என்றார். (ஓ)

## உயிருடன் பிடிபட்ட 15 அடி நீள மலைப்பாம்பு

மஸ்கெலியாவில் லக்கம் எனும் தோட்டத்தில் 15 அடி நீளமுள்ள மலைப்பாம் பொன்று உயிருடன் பிடிக்க ப்பட்டுள்ளது.

தொழிலாளி ஒருவர் லக்கம் தோட்ட வீதி வழியாக நடந்து சென்று கொண்டிருக்கும் போது இப் பாம்பை கண்டுள்ளார்.

உடனே யூரியா பேக்கின் உதவியுடன் அப்பாம்பை பிடித்துள்ளார். பின்னர் நல்ல தண்ணி வன இலாகா அதிகாரிகளுக்கு இது குறித்து அறிவித்தவுடன் அவர்கள் வந்து பாம்பை பொறுப்பேற்றுள்ளனர். (ஓ)

## வெளிநாட்டு படையினர் ஆயுதங்களை காண்பித்த பின்னரே செயற்பட அனுமதி

(கொழும்பு)

சார்க் மாநாட்டுக்காக வருகை தரும் வெளிநாட்டுத் தலைவர்களின் பாதுகாப்புக்காக வரும் பாதுகாப்புத் தரப்பி னரின் சேவைகளுக்கு எவ்வித இடை யூறும் ஏற்படாத வண்ணம் செயற்படு வது என அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

அதே நேரம் இலங்கையின் பாது காப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கமைய இவர்கள் செயற்படுவார்கள் என்றும் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மேல் மாகாண சிரேஷ்ட காவல்துறை அதிகாரி நிமல் மெதிவக்க இந்தத் தகவல்களை வெளியிட்டுள் ளார்.

இதேவேளை இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் படையினர் முதலில் தமது ஆயுதங்களை இலங்கையின் அதிகாரிகளுக்குக் காண்பித்த பின்னர் தமது ஆயுதங்களுடன் செயற்பட அனு மதிக்கப்படுவர் என அவர் குறிப்பிட் டார். (ஓ)

# சுதுமலை நாவலர் பாலர் பாடசாலை நான்காம் ஆண்டு விழாச் சிறப்பு மலர் –2008

## செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி



சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலையின் நான்காம் ஆண்டு பூர்த்தி விழா குறித்து ஆசி கூறுவதில் ஆனந்தமடைகிறேன்.

சைவத்தமிழ் பாரம்பரியத்தை பேணும் சுதுமலை திருப்பதியில் இயற்கை அழகு மிக்க ஈஞ்சடியில் இப்பாடசாலை எழுச்சி பெற்று விளங்குகிறது. நல்லை நகர் நாவலர் பெருமானுக்கு உன்னத கௌரவம் கொடுக்கும் வகையில் அப்பெருந்தகையின் உருவச் சிலையை நிறுவி , நவீன வசதிகளுடன் இப்பாடசாலையை நிர்வகித்து வருவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

இப்பாடசாலை நிர்வாகிகளின் சிறந்த பணியும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களின் ஆர்வமும் சிறந்த முன்பள்ளியாக இப்பாடசாலை பலராலும் மதிக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அன்பர் திரு. இ.பேரின்பநாயகம், திரு. கந்தையா ஸ்ரீ நந்தகோபன் அவர்களின் தூர நோக்கும் பல்துறை சார் அறிஞர்களை அழைத்து அவர்களின் கருத்துக்களை இப் பாடசாலை சார் சமூகம் அறிய உதவி வருவது சிறப்புக்குரிய விடயமாகும். காலத்தின் தேவை கருதி கல்விச் சாலைகளை நெறிப்படுத்தவேண்டியது கற்ற சமூகத்தின் கடமையாகும்.


சுதுமலை நாவலர் பாடசாலை காலத்துக்கு பொருத்தமான வகையில் விளையாட்டு முற்றத்தோடு கூடிய நவீன முன்பள்ளியாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரிய கைங்கரியமாகும். போரின் சூழ்நிலையிலும் எதிர்கால சந்ததி பற்றிய சிந்தையோடு செயற்படும் நற்பண்பாளர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள், நாவலர் பாலர் பாடசாலை ஞாயிறு தினமும் உதிப்பது போல் நித்தமும் நிலை பெற்று ஒளி தரும் என்பதில் ஐயமில்லை. இப்பாடசாலையின் மகோன்னத வளர்ச்சி என்றும் மேம்மையுற எனது நல்லாசிகளைத் தெரிவித்து அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரை தானே"

*ஆறு திருமுருகன்.*

காலம் :-
20.07.2008
ஞாயிற்றுக்கிழமை
பி.ப.3 மணி
இடம்:-
"பேராயிரவர் அரங்கு"
ஈஞ்சடி
சுதுமலை





## ஆசிச் செய்தி

சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞான வைரவர் கோயில் வீதி யிலேயே எழுச்சிக்கோலத்துடன் காட்சி தருகின்றது நாவலர் பாடசாலை. எமது நாட்டுக்கும் மக்களுக்கும் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன் ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து அமைத்திருக்கிறார்கள். இப் பாடசாலையின் நான்காம் ஆண்டு விழாவிலே அவர்களையும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களையும் வாழ்த்தி ஆசி கூறுகிறேன்.

பாடசாலை நிர்வாகமானது வைரவப்பெருமானை வணங்கி மேலும் மேலும் இந்த பணியை வருடாவருடம் நடத்த வேண்டும் எனக் கூறி ஈஞ்சடி வைரவப் பெருமானை வேண்டி எமது ஆசியையும் நன்றியையும் கூறி விடை பெறுகிறேன்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

*சுப மங்களம்*

*ஈஞ்சடி வைரவர் ஆலய*
*பிரதம குரு*
*சிவஸ்ரீ ந. உருத்திர மூர்த்திக் குருக்கள்.*

## நன்றி மறவோம்...



அற்புதமான இந்தக் கைங்கரியத்தைச் செய்வதற்கு எல்லாம் வல்ல ஈஞ்சடிப்பதியானின் அருளே அல்லாமல் வேறேதும் இல்லை. எமது பாடசாலை நான்காம் ஆண்டு நிறைவிலே மகிழ்வடைகின்றது. எமது மாணவர்கள், பெற்றோர்கள் எல்லோரும் இவ்விடத்தில் மகிழ்ச்சியடைகிறார்கள். இன்றைய இந்த விழாவில் புதிய பல அம்சங்கள் நிகழ இருக்கின்றன. அன்னை சிவத்தமிழ் செல்வியின் திருவுருவப்படம் திரை நீக்கம், பேராயிரவர் அரங்கு திறப்பு, எம் ஊரில் வாழ்ந்து கொண்டு தமது நலன்களுக்கும் அப்பால் சேவையாற்றும் நான்கு பெரியோர் கௌரவிப்பு, சுதுலை நூல் வெளியீடு எனப் பரந்து விரிந்த நிகழ்வாக அமைகிறது. இவை ஏன் என்ற கேள்வி எழுவது வழக்கம் .

"நன்றி மறவாமை" என்ற ஒரு சொல்லே இதற்கு விடையாக அமையும்.

என்னுடைய பார்வையிலே என்னாலும் எனது சபை உறுப்பினர்களாகிய திரு.க.இராசரத்தினம், திரு.சி.சந்திரராசா, திரு.சி.பாலேந்திரா, திரு.க.பாலசுப்பிரமணியம், திரு.த.இலங்கநாதன், திரு.ந.பாவநாதன், இ.ஈஸ்வரன், ந.குணரத்தினம் இவர்களுடன் இக்கைங்கரியத்தை நிறைவேற்ற துணையாக இருக்கும் க.சிறிநந்தகோபன், திரு.ச.தம்பித்துரை போன்றவர்களாலும் செய்யப்படுகின்ற இவ்வாறான விழாக்கள் சமூகத்திற்கு தேவையான ஒன்று எனப்படுகின்றது.

நன்றி மறவாப் பண்பை எமது இளைய சந்ததிக்கு நாம் ஊட்ட வேண்டும் என்ற சிறந்த நோக்கோடு இவ்விழா எடுக்கப்படுகிறது. விழா சிறக்க எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

நன்றி

*தலைவர்,*
*திரு இ.பேரின்பநாயகம்*

## வாழ்த்துச்செய்தி



சுதுமலை நாவலர் பாலர் பாடசாலை தனது 4ஆவது ஆண்டுவிழாவை இன்று 20.7.2008 ஞாயிற்றுக்கிழமை மிகவும் சிறப்பாக கொண்டாடும். இந் நன்னாளிலே வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

புகழ் பூத்த அதிபர் வரிசையிலே எம் மண்ணின் மைந்தன் அமரர் பேராயிரவர் அரங்கிலே இவ்விழா நடைபெறுவது மிகவும் போற்றத்தக்கது. தந்தையின் ஞாபகார்த்தமாக இவ் அரங்கை அமைத்துத்தந்த செல்வி ரோகினி பேராயிரவர் (ஆசிரியை உடுவில் மகளிர் கல்லூரி) அவர்களை சுதுமலை வாழ் மக்கள் என்றும் நன்றியுடன் நோக்குவார்கள். கல்வி மான்களும் சித்தர்களும் வைத்தியர்களும் நிறைந்த சுதுமலை கிராமத்திலே ஆலயச்சூழலில் நாவலர் பெயர் தங்கி நிற்கும் இப்பாடசாலை பல பெரியார்களினதும் ஆன்மீகவாதிகளினதும் ஆசியுடனும் நிறுவப்பட்டது.

இப்பாலர் பாடசாலை எல்லா வளங்களும் பெற்று சிறப்புடன் மிளிர வாழ்த்துகின்றேன்.

*ச.தம்பித்துரை*
*சமாதான நீதவான்.*

(சி/1341)

## இறைவனைப் பிரார்த்தனை செய்வோம்

அழகிய ஆல மரக்குடைக்கீழே பாலர் நீங்கள் பக்குவமாய் கற்று உயர்ந்திட ஈஞ்சடிப்பதியான் அருள்வேண்டி பிரார்த்திப்போம்.



எம் சுதுலைக்கிராமம் கல்விப் பாரம்பரியத்திலேயே தனக்கென்று பல முத்திரைகளைப் பதித்து மணம் பரப்புகிறது. நாவலர் பெருமானார் காலத்திலே வாழ்ந்து இறுதியிலே சைவம் நிலையானது என்று உணர்ந்த கரோல்ட் விஸ்வநாதபிள்ளை அவர்கள் நம் ஊர்ப் புகழ் பூத்த கல்விமான். அதிபர் மு. பேராயிரவர் , பேராசிரியர் எஸ்.கே. சண்முகநாதன், Dr.நவமலர் கனகரத்தினம் என விரித்துக்கொண்டே போகப் பட்டியல் நீளும். இப்பாரம்பரியத்தை நாம் மேலும் மெருகூட்டி வளம் படுத்தவேண்டும் என்ற நோக்கிலே சுதுமலை நாவலர் பாலர் பாடசாலையை உருவாக்கினோம். இதற்கெல்லாம் அருளை வழங்கும் அந்த வைரவப் பெருமானை நினைத்துப் பிராத்திப்போம்.

மாணவன் செழித்து ஓங்க குடும்பம் ஓங்கும், குடும்பங்கள் ஓங்க கிராமம் ஓங்கும், இவ்வாறாக நாடு செழித்து ஓங்கும்.

நான்காம் ஆண்டு நிறைவிலே மகிழ்வடையும் எமது பாடசாலை மேன்மேலும் பலவழிகளில் செழித்துவ ளர இறைவனைப் பிரார்த்திப்போம்.

இன்றைய தினம் கௌரவிக்கப்படும் திரு.ச.துரைசிங்கம், வே. தம்பாபிள்ளை ,தி.அருட் பிரகாசபிள்ளை, பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை ஆகியோரை பாராட்டி வாழ்த்தி அமைகிறேன்.

நன்றி

*க.ஸ்ரீநந்தகோபன்.*
*செயலாளர்,*
*ஆசிரியர் சண்டிலிப்பாய்*
*இந்துக்கல்லூரி.*

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை
Pilot Examination

ஆனி 2008
June 2008

தரம் 13
Grade 13

வணிகக் கல்வி- II (பகுதி II)
Business Studies-II (Part II)

2 மணித்தியாலங்கள்
2 Hours

முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடைதருக?

(01) i) a) முயற்சியாண்மை என்பதனால் கருதப்படுவது யாது?
b) முயற்சியாண்மையின் முக்கியத்துவங்கள் 03 தருக?

ii) a) வணிகச்சந்தர்ப்பங்கள் என்பதனை உதாரணம் தந்து விளக்குக?
b) முகாமைத்துவ ரீதியாக அதிகாரங்கள் என்பதனால் கருதப்படுவது யாது?

iii) கீழ்வரும் முகாமை தொடர்பான எண்ணக்கருக்களை விளக்குக?
a) மானிடத்திறன்கள் (Human Skills)
b) முகாமையின் விசாலம் (Span of Control)
c) நிறுவனங்களின் கட்டமைப்பு

iv) உற்பத்திச் செய்முறை தொடர்பாக இடம் பெறக்கூடிய தொழிற்பாடுகளை இனங்காண்க?

v) இரும்புக் கட்டுப்பாடு தொடர்பான பிரதான கிரய வகைகளை இனங்கண்டு உதாரணம் தருக?

vi) a) பொருட்களை தொடர்பான பொதியிடலின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் வசதி(Convenience) என்பதன் கருத்து யாது?
b)சமுதாய சந்தைப்படுத்தல் எண்ணக்கரு(Social Marketing Concept) என்பதன் அவசியம் யாது என விளக்குக?

(02) i) சந்தைப்படுத்தல் செய்முறை என்பதனையும் அவற்றுள் தொடர்புள்ள பணிகளையும் இனங்காண்க?

ii) பின்வரும் விடயங்களை விளக்குக.
a)Default Board (குறைபாட்டுக் கம்பனிப்பட்டியல்)
b) Corporate Board (ஒருங்கிணைந்த பட்டியல்)
c) Repurchase treasary bill market (மீள் கொள்வனவுச் சந்தை)

iii) தொழில் வடிவமைப்பு என்பதனை விளக்கி உதாரணம் தருக?

iv) உள்ளக ரீதியாக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் 03 தருக?

v) வணிகத் திட்டமொன்றின் முக்கியத்துவங்கள்(Business Plan) 06 குறிப்பிடுக.

vi) a) சந்தைப்படுத்துவோனால் பொருத்தமான விலையிடல் முறையினை நிர்ணயிப்பதில் கருத்தில் கொள்ளப்படும் 03 காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக?
b) கம்பனியொன்றின் மூலம் பொருட்களுக்கு விலையிடப்படும் மூன்று பிரதான முறைகளைக் குறிப்பிடுக?

(03) i) a)முகாமைப் பணிகளுக்கிடையிலான பிரதான தொடர்பினை ஆராய்ந்து விளக்குக?
b) திட்டமிடலின் பிரதான படிமுறைகளை இனங்காண்க.

ii) உற்பத்தி முகாமைத் தொழிற்பாட்டுடன் தொடர்புடைய மூன்று பிரதான முகாமை ஊழியர்களை வரிப்படமாகத் தருக?

iii) சந்தைப்படுத்துவோரால் நுகர்வோரைக் கவர்ந்து கொள்வது தொடர்பாக பொருள் ஒன்றின் மீது காணப்படுகின்ற 05 மட்டங்களை இனங்கண்டு விளக்குக?

iv) சுருக்கமாக விளக்குக?
a) பண்டக்குறி விசுவாசம் (Brand Performance)
b)இருப்புச் சுழற்சி விகிதம் (Stock Consumption Rate of Speed)
c) இருப்புப்பதிவேடுகள் (Inventary ledger)

(04) 1) கீழ்வரும் ஒவ்வொரு தரப்பினரும் வணிகத்தின் மீது அக்கறை செலுத்துவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
a) கடன்கொடுத்தோர் b) தொழிற்சங்கம் c) சமூகம்

2) அங்கீகார வணிகம் தொடர்பாக வியாபாரக் குறிமுறைமை அங்கீகார வணிகத்திற்கும், உற்பத்திமுறைமை அங்கீகார வணிகத்திற்குமிடையிலான வேறுபாடுகள் எவை?

3) பொதியொன்றின் மூலம் வெளிப்படுத்தக் கூடிய 06 தகவல்களை இனங்காண்க.

4) சிறப்புத்தேர்ச்சி என்பதை உதாரணம் தந்து விளக்குக.

(05) 1) a) மோட்டார் வாகனங்கள் தொடர்பாக கட்டாய காப்புறுதிப்பத்திரம் யாது?
b) இப் பூட்கையின் மூலம் நட்டஈடு பெறக்கூடிய தரப்பினர்கள் யாவர்?

2) பின்வரும் கூற்றுக்களை விளக்குக.
a)இயங்காத கணக்கு
b) தடைசெய்யப்பட்ட சொத்துக்கள்

3) போக்குவரத்தின் அடிப்படைகளை இனங்கண்டு விளக்குக.

4) a) தகவல்முறைமை என்பதனால் கருதப்படுவது யாது?
b)தகவல்முறைமை தொடர்பான செய்முறையிலான வரிப்படமாக காட்டுக?

(06) 1) இலங்கையின் போக்குவரத்துமுறைமையிலுள்ள ஆறு குறைபாடுகளையும், அதற்கான தீர்வுகளையும் தருக?

2) முகாமை மட்டத்தில் பயன்படுத்தப்படும் தகவல் முறைமைகள் 02 தருக?

3) சிறுகுறிப்பு எழுதுக?
a)உள்ளீடு(Input) b) தரவு அடிப்படை(Database) c) GSPT

4) a) இலங்கையிலுள்ள இறக்குமதியாளன் ஒருவன் இறக்குமதி தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைப் பொருத்தமான ஆவணங்களுடன் குறிப்பிட்டு விளக்குக.
b) சென்மதிநிலுவை, வர்த்தக நிலுவை எனும் எண்ணக்கருக்களை விளக்கி தொடர்புபடுத்துக?

# சிலம்பில் துலங்கும் ஆடல் அற்புதங்கள்

தமிழக வரலாற்றில் கி.பி 3-6ஆம் நூற்றாண்டு வரையானகாலப்பகுதியினை சங்க மருவிய காலம் என்றும் களப்பிரார் காலம் என்றும் கூறுவர்.பெரும்பாலும் சமண, பௌத்த சமயம் மேலோங்கத் தொடங்கிய காலமாகக் கருதப்படுகிறது.வடமொழிச் செல்வாக்கு அதிகரித்திருந்த இக்காலப் பகுதியிலே அறம் கூறும் இலக்கியங்கள் தோன்றின. உதாரணமாக திருக்குறள் அவற்றைவிட ஆற்றுப்படை



நூல்கள் பலவும் தோன்றியிருந்தன. பெருங்காப்பிய வகையில் அடங்கும் சிலப்பதிகாரமும், மணிமேகலையும்இக் காலத்தில் தோற்றம்பெற்றிருந்தன.

சிலப்பதிகாரம் உலகப்பொதுநூலாக விளங்குகிறது. இயல்,இசை, நாடகம் போன்ற முத்தமிழ் கற்கும் கலைஞர்களுக்கும், நீதி கூறும் சட்ட வல்லுனர்க்கும், தொழிலாளர்க்கும் குறவர் குடிமக்களுக்கும் இன்றும் அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கோணத்தில் பார்க்கக் கூடிய பல விடயங்களைக் கூறும் கருவூலமாக விளங்குகிறது. இத்தகைய காப்பியத்தை எமக்குத் தந்தவர் இளங்கோவடிகள்.அவரது மூல இலக்கியத்திற்கு இன்று பலர் உரையெழுதி வந்துள்ளனர்.

இக் காப்பியத்திலே முத்தமிழ் விரவியிருப்பதை ஆய்வாளர்கள், உரையாசிரியர்கள் எடுத்துக் கூறுயிருக்கின்றனர்.ஒவ்வொரு காண்டப் பகுதியிலும் அந்தந்தப் பகுதிக்குரிய மக்களும் அவர்களோடிணைந்து வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களும் அவற்றோடு இணைந்தவாறானசமய விழாக்கள், ஆடல்கள், இசை வடிவங்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

### ஆடல் நாயகி மாதவி

சிலப்பதிகாரத்தின் ஆடல் நாயகியான மாதவி அகத்தியரின் சாபத்தினைப் பெற்ற ஊர்வசி என்றும், மாதவிக்கு வழங்குப்பட்ட தலைக்கோல் பட்டத்திலே பயன்படுத்தப்பட்ட மூங்கில் அதே அகத்தியரின் சாபம் பெற்ற இந்திரனின் மகன் சயந்தன் என்றும் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். ஊர்வசி தேவலோக ஆடலரசி என்பது குறிப்பிடத்தக்கது. அவள் வழித்தோன்றலாக வந்தவளே மாதவி.

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதையும் ஆய்ச்சியர் குரவையும் ஆடற் கருத்துக்களைச் செறிவாகக் கொண்ட பகுதிகளாகும். அவற்றைவிட இந்திரவிழா ஊர் எடுத்தகாதை , ஊர்காண்காதை, வேட்டுவரி, புறச்சேரி இறுத்த காதை, கால்கோட் காதை போன்ற பகுதிகளில் ஆடலுக்குரிய சான்றுகள் உருவாவதைக் காணலாம்.


### நாட்டியம் வரன் முறையாக கற்பிக்கப்படுகின்ற ஒரு கலை

நாட்டிய மகளிருக்கு அடிப்படை பாத்திர லட்ஷணம் ஆடல், பாடல், அழகு இம் மூன்றும் அமைந்திருக்க வேண்டியதாகும். இவை மூன்றும் மாதவியிடம் காணப்பட்டன. முறைப்படி 7 வருடங்கள் கற்றுப்பின் அரண்மனையில் அரங்கேறினாள் என்று இளங்கோவடிகள் கூறுவது இன்றைய செந்நெறி பரதத்தின் அடிப்படைப் பண்பினையே காட்டுகிறது. முறைப்படி கற்றல், மற்றும் அரங்கேற்றம் ஆகிய இரு விடயங்களும் உற்றுநோக்கத் தக்கவை. ஏனெனில் நாட்டியம் என்பது ஒரு வரன் முன்றயாக கற்கப் படுகின்ற ஒரு கலையாகும்.



ஆடல் அரசன் ஆடலை முழுமையாக கற்றுக்கொடுக்கும் பூரணத்துவம் உடையவராக இருக்கவேண்டும் எனசிலம்பு கூறுகின்றது.

பூர்விக மக்கள் வாழ்க்கையில் வரன் முறையற்ற கல்விச்செயற்பாட்டுடன் இணைந்த ஆடலானது பண்பாட்டு வளர்ச்சியோடு முறையான கல்விச் செயற்பாட்டுடன் இணைந்து வருவதைக் காணலாம். நட்டுவனார் பின்வருமாறு இருக்க வேண்டும் என வரன் முறைக் கல்வியில் கூறப்படுகிறது.



◆அகக் கூத்து (வேத்தியல்), புறக் கூத்து (பொதுவியல்) ஆகிய இரு வகைக் கூத்துக்களின் வித்தியாசங்களை அறிந்து போதிக்க தகுந்தவர். அரசருக்காக ஆடும் கூத்து அகக் கூத்தாகவும், பொது மக்களுக்காக ஆடும் கூத்து புறக் கூத்தாக வும் கூறப்படுகின்றது.

### பதினொரு வகைக் கூத்து

சாந்திக்கூத்து, வினோதக்கூத்து போன்ற பலவகைக் கூத்துக்களையும் அவற்றின் உறுப்புக்களான பொருள்,யோனி, விருத்தி, சந்தி, சுவை, நாடகம், சந்தப்பாட்டு, இசைப் பாட்டு, வேதம், குறிப்பு,சந்துவம், அபிநயம் சொல், சொல்வகைகள் என்பவற்றையும் ஒவ்வொரு கடவுள்களும் சம்பவங்களின் போதும் ஆடிய பதினொரு வகை ஆடல்களையும் பற்றி அறிந்திருந்தவராகவும் இருத்தல் வேண்டும். இந்த பதினொரு வகை ஆடல்களும் மாதவி தன்அரங்கேற்றத்தின் போது ஆடியிருந்தாள்.


**உ.உமாமகேஸ்வரி**
நாட்டியக் கலாவித்தகர்
(இறுதி வருடம்)
இராமநாதன் நுண்கலைப்பீடம்.


◆கொடுகொட்டி:- தமக்கு கெடுதல் செய்த மூன்றுகோட்டைகளின் அசுரர்களையும் அவர்களது இராச்சியத்தையும் அழிக்கும்படி தேவர்கள் சிவபிரானிடம் வேண்ட, அதற்கேற்ப சிவன் முப்புரங்களையும் எரித்து ஆடியது.

இதுவே திரிபுரதாண்டவத்தின் மூலமும் கூட.

◆பாண்டரங்கம்:-தேரின் முன்னின்று பிரம்மா காண சிவன் ஆடிய கூத்து.

◆அவ்வியம்:-ஹம்சன் யானை உருவெடுத்து வந்தபோது கிருஷ்ணன் அவனை அடக்கியாடிய வெற்றிக்கூத்து.

◆துடியாடல்:- சூர சம்ஹாரத்தின்பின் கடலையின் நடுவேமுருகன் கையில் உடுக்கையேந்திஅடித்த வண்ணம்ஆடியகூத்து ஆகும்.

◆குடக்கூத்து:-பாணசூரன் சிறைப்பிடித்த காமனின் மகன் அனுருத்தனை விடுதலை செய்வதற்காக கண்ணன் குடத்தின் மீது ஆடிய கூத்து ஆகும்.

◆குடைக்கூத்து:- அரக்கர் தோல்வி கண்ட நிலையில் முருகன் வெற்றிக் குடைபிடித்து ஆடிய ஆடலா கும்.

◆பேடியாடல்:-தன் மகனை பாணசூரனிடமிருந்து மீட்பதற்காக காமன் பெண் வேடம் பூண்டு ஆடிய ஆடல்.

◆மரக்கால்கூத்து:-துர்க்கைக்கு எதிராக அரக்கர்கள் ஏவிய பாம்பு, தேள் போன்ற நச்சுப் பூச்சிகளைகொல்வதற்காக மரக்கால்களை அணிந்து ஆடியது.

◆மல்லாடல்:- பாண சூரனை எதிர் த்து கண்ணன் மல் லனாக மாறி ஆடிய கூத்து



◆ பாவையாடல்:- அவுணர்களின் போர்க் கோலம் ஒழிவதற் காக திருமகள் ஆடி யது.


◆கடயக்கூத்து:- இந்திரனின் மனைவி வயலில் உழவனின் மனைவியாக ஆடியது.

இன்றும் இவை எம் பரதநாட்டிய நாடகப் பகுதியில் பெரும்பாலும் இடம்பெறுவதைக் காணாலாம்.

◆இத்தகைய கூத்துக்களுக்கு இணைந்த பாடல்களும் பல வகை நாட்டியத்திற்கு ஏற்றவையான பண்ணிறைந்த தமிழ் பாடல்களையும் அறிந்திருந்திருத்தல்.

◆கடவுள் வாழ்த்துக்கள் (தேவபாணி) தாளங்கள், தாளத்தனங்கள் போன்றவற்றை முறைப்படிநிகழ்விக்கக் கூடிய வல்லமையுடையவராய் இருத்தல்''வடுகும் மட்டத்தாளம் முதலாக ஏகதாளம்இறுதியாக வைசாக நிலையிலே ஆடினாள்'' என்பதும் இன்றைய தாளத்தின் விரிவிற்குரிய அடிப்படையாகஅமைந்திருக்கலாம். (தொடரும்)

# பிறின்ஸ்-டி.வில்லியர்ஸ் சிறப்பான இணைப்பாட்டம்; தென்னாபிரிக்க அணி முன்னிலை பெற்றது



சதம் கடந்த மகிழ்ச்சியில் பிறின்ஸ்

(லீட்ஸ்)

பிறின்ஸ்-டி.வில்லியஸின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி வலுவான நிலையில் உள்ளது.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 322 ஓட்டங்களை எடுத்து இங்கிலாந்து அணியைவ் விட 119 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 4 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வி இன்றி முடிபடைந்த நிலையில்இரண்டாவது டெஸ்ட் நேற்று முன்தினம் லீட்ஸில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பீற்றர்சன் 45 ஓட்டங்களையும் பெல் 31 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் மோர்கல், ஸ்ரையன் ஆகியோர்தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிபில் 3 விக்கெட்டுக்களை இழந்து 101 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து ஆடிய தென்னாபிரிக்க அணி பிறின்ஸ்-டி. வில்லியர்ஸின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 4-வது விக்கெட்டுக்கான 179 ஓட்டங்கள் இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான நிலைக்கு முன்னேறியது.

மழை காரணமாக ஆட்டம் சில மணி நேரம் தாமதித்தமையால் நேற்று இரண்டாம் நாள்ஆட்டத்தில் 76 ஓவர்களே வீசப்பட்டது.


இந்நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 322 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் பிறின்ஸ் 134 ஓட்டங்களை எடுத்து தொடரில் 2-வது சதத்தை கடந்ததுடன் அவருடன் இணைந்து டி.வில்லியர்ஸ் 70 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத்தாடி வருகின்றார்.

முன்னதாக சிமித் 44, அம்லா 38 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் அன்டர்சன் 2 விக்கெட்டுக்களையும் பற்றின்ஸன், பிளின்டொப் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தென்னாபிரிக்க அணி, இங்கிலாந்து அணியை விட முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் 119 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளது. 3ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (5)



பந்தை விளாசும் டி.வில்லியர்ஸ்

# மழையின் குறுக்கீட்டால் 2-ம் நாள் ஆட்டம் வீணானது

## டெண்டுல்கர், கார்த்திக் அரைச்சதம்

(கொழும்பு)

மழை காரணமாக இரண்டாம் நாள் ஆட்டம் 48 ஓவர்களே விசப்பட்ட நிலையில் நிறைவடைய இந்திய அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன் மூலம் இந்திய அணி 2 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் உள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட்,5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதற்கு முன்னதாக நேற்று முன்தினம் ஆரம்பமான மூன்றுநரள் பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி இலங்கை கிரிக்கெட் சபை லெவின் அணியுடன் மோதி வருகின்றது.



இப்போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் சபை லெவின் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிபில் ஒரு விக்கெட்டை இழந்து 4 ஓட்டங்களை எடுத்தது.

இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் தடுமாறியது.

எனினும் டெண்டுல்கர், தினேஸ் கார்த்திக்கின் சிறப்பான ஆட்டத்தால் மீண்ட இந்திய அணி,நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக நிறுத்தப்பட்டபோது அதன் முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் டெண்டுல்கர் 69 ஓட்டங்களையும் தினேஸ் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும் எடுத்தனர்.

முன்னதாக ராவிட் 5, சேவாக் 27, கங்குலி 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததுடன் வி.வி.எஸ்.லக்ஸ்மன் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் பிரசாத் 3 விக்கெட்டுக்களையும் டில்கார பெர்னாண்டோ 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

மூன்றாவதும் இறுதி நாளுமான இன்று ஆட்டம் தொடர்கிறது. (5)

# ஸ்டான்போர்ட் டென்னிஸ் அரையிறுதியில் செரீனா

(ஸ்டான்போர்ட்)

ஸ்டான்போர்ட் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம், சுவிட்சர்லாந்தின் பெய்டி சினைடரை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் நகரில் டபிள்யூ.டி.ஏ அந்தஸ்து பெற்ற பாங்க் ஒப் தி வெஸ்ட் கிளாசிக் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

நேற்றுமுன்தினம் நடந்த ஒற்றையர் காலிறுதியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சுவிட்சர்லாந்தின் பெய்டி சினைடரை சந்தித்தார்.

விறுவிறுப்பான ஆட்டத்தில் முதல் செட்டை செரீனா 6:3 என கைப்பற்றி முன்னிலை வகித்தார். தொடர்ந்து இரண்டாவது செற்றிலும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய செரீனா 6:1 என எளிதில் தன்வசப்படுத்தினார்.

இறுதியில் செரீனா; சினைடரை 6:3, 6:1 என நேர் செற்கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

அரையிறுதியில் செரீனா, கனடாவின் அலெக்சாண்டரா வோஸ்நியக்கை சந்திக்கிறார். (5)

# நடிகைகளுடன் காதல் யுவராஜ் சிங் ஒப்புதல்

(மும்பை)

இந்தி நடிகைகள் கிம் ஷர்மா, தீபிகா படுகோன் ஆகியோருடன் தனக்கு நெருங்கிய உறவு இருந்தது உண்மைதான் என்று இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் கூறியுள்ளார்.



இது குறித்து வார இதழ் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

இந்திய அணிக்கு தலைவராக வருவதே என் நீண்டநாள் கனவு அது நிச்சயம் ஒரு நாள் நிறைவேறும் என்ற நம்பிக்கை உள்ளது.

ராவிட் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகியபோது நான் நல்ல போர்மில் தான் இருந்தேன். எனக்கு அணித்தலைவர் பதவி கொடுக்காததுக்கு, களத்துக்கு வெளியே என்னுடைய நடவடிக்கை சரியில்லாததே காரணம் என்று சிலர் சொல்கின்றனர்.

அதை ஏற்கமுடியாது. விருந்துகளில் கலந்து கொள்வது எனக்கு பிடித்தமான பொழுதுபோக்கு.

அதேசமயம் அதனால் என்னுடைய விளையாட்டு பாதிக்காமல் பார்த்துக்கொள்வேன். நடிகை தீபிகாவுடன் நெருங்கிப் பழகியது உண்மைதான்.

பின்னர் அவர் வேறு நபருடன் பழக ஆரம்பித்தார். அது அவரது சொந்த விருப்பம். அவருக்கு முன்பாக நடிகை கிம் ஷர்மாவுடன் நான்கு ஆண்டுகள் பழகி வந்தேன். அவரிடமிருந்து ஏராளமான விடயங்களை கற்றுக்கொண்டேன்.

விருந்துகளுக்கு எப்படி ஆடை அணிவது பிறரிடம் எப்படி பழகுவது உட்பட பல விடயங்களையும் அவர் தான் கற்றுக்கொடுத்தார்.

நாங்கள் மிகவும் ஆத்மார்த்தமாக பழகினோம் இவ்வாறு யுவராஜ் கூறியுள்ளார். (5)

# அபராதம் செலுத்த அக்தர் மறுப்பு பயிற்சி அணியில் இருந்து நீக்கம்



அக்தர்

(கராச்சி)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சர்ச்சைக்குரிய வேகப்பந்து வீச்சாளர் சொய்ப் அக்தர், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை கடுமையாக விமர்சித்ததால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அவருக்கு 18 மாதம் விளையாட தடை விதிக்கப்பட்டது. ரூபாய் 70 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து லாகூர் நீதிமன்றத்தில் அவர் தொடர்ந்த வழக்கில் தடைவிலக்கப்பட்டது.

ஆனால் அபராதத் தொகையை செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. ரூபாய் 70 இலட்சம் அபராதத் தொகையை செலுத்த சொய்ப் அக்தர் மறுத்து வருகிறார்.

கடந்த 14ஆம் திகதிக்குள் அவர் அபராதத் தொகையைசெலுத்தி இருக்க வேண்டும். இதுவரை அபராதத் தொகையை செலுத்தாததால் பயிற்சிமுகாமுக்கான பாகிஸ்தான் அணியில் இருந்து அக்தர் நீக்கப்பட்டுள்ளார்.

கனடாவில் நடைபெறும் இருபது ஓவர்க்ள் போட்டி மற்றும் சம்பியன் தொடர் போட்டிக்கான பயிற்சி அணியில் அவர் இடம் பெற்றிருந்தார்.

அபராதத் தொகையை செலுத்தாததால் பயிற்சி முகாமுக்கான அணியிலிந்து வெளியேறுமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது. (5)

## க.பொ.த. உயர் தர பரீட்சைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 21,22,23,24,25 மற்றும் 28 ஆகிய தினங்களில் யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் இவ்வருடம் க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கருத்தரங்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இக் கருத்தரங்குகள் தினமும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். இக்கருத்தரங்கினை க.பொ.த. உயர் தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் பிரதம பரீட்சகர்களாக கடமையாற்றி வரும் யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் நடத்தவுள்ளனர். (ஓ)

## உரிய பாதுகாப்புத் தராமைக்கு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வேன்

### ஜானக பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

உரிய பாதுகாப்பு வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தாம் நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் வட மத்திய மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளர் ஜானக பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் பேர்டி பிரேமலால் திஸாநாயக்கவுக்குப்பாரியளவிலான பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் தமக்கு எவ்வித பாதுகாப்பும் வழங்கப்படவில்லை என ஜானக பெரேரா தெரிவித்துள்ளார். உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர், தேர்தல் ஆணையாளர் ஆகியோருக்கு ஏற்கனவே அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## ஆடிவேல் தீர்த்தத்தில் இருவர் கடலுக்குப் பலி

நேற்று நடைபெற்ற காரைதீவு ஆடிவேல் தீர்த்தோற்சவத்தில் அறுவர் கடலில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அவர்களில் நால்வர் காப்பாற்றப்பட இருவர் கடலோடு அள்ளுண்டு சென்றுள்ளனர். சரித்திரப் பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் தீர்த்தோற்சவம் நேற்று நடைபெற்றது.

காலை 11 மணியளவில் தீர்த்தோற்சவம் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை இவ் அனர்த்தம் சம்பவித்துள்ளது. அடுத்த வாரம் க.பொ.த. உயர் தர பரீட்சைக்குத் தோற்ற இருந்த செல்லத்துரை ஜனார்த்தனன், காண்டீபன் தனுஷாந் ஆகியோரே காணாமல் போனவர்கள் ஆவர். (ந-5)

## ‘வெள்ளைவான்’ கலாசாரத்தை ஒழிக்க ஐ.தே.கவுடன் சேருங்கள்

### ரணில் விக்கிரமசிங்க அழைப்பு

(கொழும்பு)

வெள்ளைவான் கலாசாரத்தை இல்லாது ஒழித்து நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்த அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளுமாறு கட்சியின் தலைவர் ரணில் விக்கி ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

திபுலபிட்டிய நகர மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் அபிலாஷைகளை உதாசீனப்படுத்தி அவர்களை அடக்கு முறைக்கு உட்படுத்தும் இந்த அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கு ஜனநாயகத்தை விரும்பும் அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தை மட்டும் போசிக்கும் இந்த ஆட்சி முறையை முடிபுக்குக் கொண்டு வர அர்ப்பணிப்புடன் தாம் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக அகிம்ஷை வழியில் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்கும் என ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

## ஐரோ. நாடாளுமன்றக் குழு இன்று இலங்கை வரும்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழுவொன்று இன்று இலங்கை வரவுள்ளது.ஐரோப்பிய ஒன்றியத்தின் பல்வேறு அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தக் குழுவினர் எதிர்வரும் 26ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பர்.

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து ஆராய்வதே இந்தக் குழுவினரின் விஜயத்தின் நோக்கம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றக் குழு கடந்த புதன்கிழமை ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைத் தூதுவர் ரவீநாத் ஆரியசிங்கவை சந்தித்து உரையாடியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றக் குழுவிற்கு பிரித்தானியாவின் சோசலீச குழுத் தலைவர் றொபேட்யுவான் தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

## மினிபஸ்–ஆட்டோ விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

பருத்தித்துறை வீதி, சட்டநாதர் கோவிலடியில் நேற்றுப் பிற்பகல் மினிபஸ் ஒன்றுடன் ஆட்டோ மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். பருத்தித்துறை வீதியூடாகச் சேவையில் ஈடுபட்ட மினிபஸ்ஸே ஆட்டோவுடன் மோதியதில் ஆட்டோச் சாரதி படுகாயமடைந்துள்ளார். சம்பவத்தில் நாயன்மார்கட்டு பாரதி லேனைச் சேர்ந்த செ.சந்திரன் (வயது-54) என்பவரே காயமடைந்தவராவார். (ந-5)

இதோ உங்களுக்காக...!
MP4 PLAYERS Orange 8,750/=
• 2 GB (Expand 2 GB) • FM Radio • MP3 • Games • Voice Recording • USB Cable • Power Charger • Head Phone • Driver CD
MP3 PEN DRIVE Orange 6,250/-
• 1 GB (Data) • FM Radio • MP3 • USB Cable • Voice Recording • Head Phone
• 1 GB • FM Radio • MP3 • USB Cable • Head Phone 4,750/-
MP3 / FM Radio Player for Vehicles 3,800/-
HP Note Book (Laptop) 89,000/=
Processor : Intel Core 2 Duo 2.16 GHz RAM : 1GB DDR2
HDD : 120GB Screen : 15" 4' WXGA TFT VGA : 224MB
DVD/RW Double Layer / WiFi / Bluetooth / Card Reader / Bag

MOTHER BOARD
(Three Year Warrenty)
ECS EliteGroup 945 DDR11 - 4,900/=
Asrock 1333 - D667 - 5,600/=
FoxConn 945 DDR11 - 5,900/=
(One Year Warrenty)
GigaByte 945 Gcm s2c - 6,000/=
Intel Original 945GCNL - 8,400/=

478 MOTHER BOARDS
(One Year Warrenty)
Energy DDR1 - 6,000/=
Longtron DDR1(Intel ship) - 6,900/=
MSI DDR11 - 5,900/=
BioStar DDR11 - 6,750/=

MONITORS
(Three Year Warrenty)
View Sonic 15" CRT Silver Black - 11,750/=
Samsung 15" CRT Black - 11,750/=
DigiMax 17" CRT Black - 14,000/=
Samsung 17" CRT - 15,900/=
Samsung / Daewoo 15" LCD Wide Screen - 19,500/=
(One Year Warrenty)
View Sonic 17" CRT Silver Black - 16,250/=

ACCESSORIES
ATX Casing with 450W Power Supply - 4,400/=

DIGITAL CAMERA
Nikon 10.1 Mega Pixels

PRINTERS
(One Year Warrenty)
HP D1460 Printer - 4,900/=
HP D2460 Printer - 5,750/=
HP Laser Jet 1005 - 15,250/=
Samsung ML1640 Laser jet - 13,750/=
Epson LQ 300+11 - 20,900/=

UPS
(One Year Warrenty)
Mecury 650W - 5,900/=
Power Tree 650W - 6,200/=
Power Tree 1200W(1.2Kv) - 12,250/=
(Two Year Warrenty)
Personal 650W - 6,300/=

PEN DRIVE
Kingston 1GB - 950/=
Kingston 2GB - 1,350/=
(One Year Warrenty)
Kingston 4GB - 2,350/=
Kingston 8GB - 4,600/=

SCANNER
(One Year Warrenty)
Mustek 1248UB - 6,000/=
Cannon Lide25 - 6,300/=
HP G3010 Negative Scanner - 16,750/=

TONER
HP 12A Original - 5,250/=
HP 13A Original - 5,350/=
HP 15A Original - 5,400/=
Samsung ML2010 - 7,750/=
This Offer for One Week * Warranty valid for 1 - 3 years

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்) (C-1343)

## வடக்குக் கிழக்கில் கைது...

படையினரும்' கொள்கைகளை வகுப்பதன் மூலமே இந்த நிலைப்பாட்டை முடிபுக்குக் கொண்டு வர முடியும் எனவும் உயர் நீதிமன்றம் மீது தமிழ் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் எனவும் நீதியரசர் கூறினார்.

பலாலியை அரசாங்கப் படைகள் கைப்பற்றியதன் பின்னர் பெரும் பகுதி நிலப்பரப்பு பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதாகவும் தற்போது அந்தப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தவர்கள் எந்தவிதமான பயங்கரவாதச் செயற்பாடுகள் அல்லது சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லையாயின் அவர்களை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த முடியும் எனவும் இது தொடர்பாக ஆராய்வதற்கு உயர் நீதிமன்றம் குழுவொன்றை நியமித்திருப்பதாகவும் அங்கு உரையாற்றிய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா மேலும் கூறினார். (ந-5)

## இலங்கைச்...

46 வயதுடைய முரளிதரன் மற்றும் 39 வயதுடைய வித்தியாதரன் ஆகிய சகோதரர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்குச் சட்ட விரோதமான முறையில் ஒத்துழைப்பு வழங்கியதாக இவர்கள் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள அதேவேளை,

2003 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை பல்வேறு செயற்பாடுகளைக் குறித்த சகோதரர்கள் மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (ந-5)

## வன்னியில் இடப்பெயர்வு...

இடம்பெயர்ந்த சுமார் 25 ஆயிரம் பேர் மன்னாரின் எல்லைப் பிரதேசங்களான தேவன்பிட்டி, வெள்ளாங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் வாழ்கின்றனர். அங்கு வாழும் மக்கள் தமது நீராடல் மற்றும் ஏனைய தேவைகளுக்கு அந்த ஆற்றுத் தண்ணீரையே நம்பியுள்ளனர்.

தமது விவசாய நிலங்களை விட்டு இடம்பெயர்ந்த அம் மக்கள் நிவாரணத்தை எதிர்பார்த்து கையேந்தும் நிலையில் உள்ளனர். இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகளைப் புரிந்து வந்த தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதி இலங்கை அரசால் முடக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவிகளைச் செய்ய முடியாத நிலை உள்ளது.

அதேநேரத்தில் இருப்பில் உள்ள பொருள்களை வழங்கும் நடவடிக்கையும் மந்தமாகக் காணப்படுகின்றது. முல்லைத்தீவில் மாந்தை கிழக்கு, துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவுகளில் இடப்பெயர்வுகள் அதிகளவில் நிகழ்ந்துள்ளன.

இடம்பெயர்ந்த ஒரு தொகுதி மக்கள் அதே மாவட்டத்திற்குள் தங்கியுள்ளனர். பிறிதொரு பகுதியினர் கிளிநொச்சி மாவட்டத்திற்குச் சென்றுள்ளனர். மறுபக்கம் வவுனியா வடக்கிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்கள் தமது பிரிவுகளுக்குள்ளும் முல்லைத்தீவு மாவட்டத்திற்குள்ளும் இடம்பெயர்ந்துள்ளனர். இடப்பெயர்வுகளால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகும்.

பெரும்பாலும் விவசாயத்தை மையாகமாகக் கொண்ட மக்களுக்கு இடப்பெயர்வு பெரும் பாதிப்பை தந்துள்ளது. பாரியளவில் விவசாயம் செய்யும் கட்டுக்கரை, வவுனிக்குளம் பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்குக் குடிநீர், உணவு, இருப்பிடம் என்பனவே முதற்கட்ட அவலமாக இருக்கின்றது. இடம்பெயர்ந்த மக்கள் வீதியோரக் காடுகளில் அடைக்காலம் அடைந்துள்ளனர். சிறிய கொட்டில்களை அமைக்கும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எவரது உதவியும் கிடைக்காத நிலையில் குழந்தைகள் உட்பட சிறுவர்கள் பெரும் அவலங்களுக்கு உள்ளாகியுள்ளனர். காட்டு மரங்களில் ஏணைகள் கட்டிக் குழந்தைகள் உறங்குகின்றனர். தண்ணீருக்காகச் சிறுவர்கள் குடங்கள், கொள்கலன்களுடன் அலைகின்றனர். (ந-5)

PC SOLUTIONS
Flashdrives Kingston 1GB-900 2GB-1400 4GB-2500
NOW AVAILABLE IN BEST PRICES
- Processor - Motherboard - Memory - Harddisk - Casing - UPS - Keyboard
- Mouse - Speaker - Headphone - Modem - Printer - Soundcard - TVcard
Microsoft COMPAQ TOSHIBA DELL CREATIVE IBM ASUS hp ASRock SONY AMD
✓ PC Assembling ✓ Computer Networking ✓ PC Upgrading ✓ Software Development ✓ PC Trouble shooting ✓ Virus Protection ✓ PC Service & Software installation
சேவைகளை தரமாகவும் நியாயமாகவும் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கைக்குரிய ஒரே இடம்!
PC SOLLUTIONS Computer Sales & Maintenance Centre
527/1, NAVALAR ROAD, JAFFNA. (C-1344)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.